# வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

# 2015

# செயலாற்றுகை அறிக்கை
## (2015.01.01 - 2015.12.31 வரை)

**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு**

**9 ஆம் மாடி,**
**செத்சறிபாய,**
**பத்தரமுல்லை.**

# முன்னுரை

2015.01.08 ஆந் திகதிய தேர்தலுக்கு முன்னர் வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு என அழைக்கப்பட்ட இவ்வமைச்சு தேர்தலின் பின்னர் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சாக தாபிக்கப்பட்டதுடன்,

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்
- வனசீவராசிகள் பொறுப்பு

ஆகிய நிறுவனங்கள் இதன் கீழ் இயங்குகின்றன.

2015.08.17திகதிய பொதுத்தேர்தலின் பின்னர் 2015 செப்ரெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு என மாற்றம் பெற்றது.

- **வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்**
- **தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம்**
- **தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்**
- **வனசீவராசிகள் பொறுப்பு**

ஆகிய நிறுவனங்கள் தொழிற்படுவதுடன், வலுவாதார அபிவிருத்தி செயலகம் காலக்கிரமத்தில் தாபிக்கப்படும்.

## கௌரவ அமைச்சரின் ஆசிச் செய்தி . . .

நான் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் அமைச்சராக 2015/09/07 ஆந் திகதி பதவியேற்றதன் பின்னர், கடந்து சென்ற காலப்பகுதியினுள் இலங்கையில் பிரசித்தி பெற்ற பல செயற்பாடுகளை எனது அமைச்சின் மூலம் முன்னெடுப்பதற்கு முடிந்தமையையிட்டு நான் பெரிதும் பெருமிதமடைகின்றேன்.

வலுவாதார அபிவிருத்தி எனும் விடயப் பரப்பானது இலங்கைக்கு ஒரு புதிய எண்ணக்கருவாக விளங்குகின்றது. ஒட்டுமொத்த தெற்காசியாவிலேயே முதன்முதலில் எமது நாட்டில் தான் வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக அமைச்சொன்று தாபிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆதலால் இவ் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் எமது வலுவாதார அபிவிருத்தி விடயம் தொடர்பாகவும் புத்திஜீவிகளுடன் கலந்துரையாடி நீண்டகாலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வலுவாதார அபிவிருத்தி பற்றி ஐக்கிய நாடுகள் சபையுடன் உலகின் பல்வேறு நாடுகளும் ஒன்றிணைந்து பல பிரகடனங்களை ஏற்கெனவே வெளியிட்டுள்ளன. அதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையினால் கொள்கை ரீதியாக 2030 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் கொள்கை ரீதியாக நடைமுறைப்படுத்த வேண்டிய 17 கொள்கைகள் பெயரிடப்பட்டுள்ளன. அக் கொள்கைகளை செயற்படுத்த வேண்டிய பரப்பெல்லை மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக எமது நாட்டில் உள்ள பெறுமதியான இயற்கை வளங்களை பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு என்பன இவ் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக கௌரவ சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும், கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினதும் ஆலோசனைகளுக்கிணங்க பல தொடர்ந்தேச்சையான செயற்திட்டங்கள் தற்போது திட்டமிடப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறே இத்துறையில் தேர்ச்சிபெற்ற புத்திஜீவிகள் குழாம் ஒன்றை அமைத்து வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக அவர்களது முன்மொழிவுகளும், கருத்துக்களுயும் திரட்டப்படவுள்ளன. எதிர்கால சந்ததியினருக்காக இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும். சுற்றாடல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள் மற்றும் பல்வேறு பொறுப்புக்களை வெளியிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு கருதியுள்ளேன். அதனூடாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வரும் தொழிநுட்பத்துக்கு நிகராக எதிர்கால சந்ததியினருக்கு வலுவாதார அபிவிருத்தியை கொண்டு செல்வதற்கு முடியும் என்பது எனது எதிர்பார்பாகும்.

வலுவாதார அபிவிருத்தி விடயப்பரப்புக்கு மேலதிகமாக வனசீவராசிகள் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மற்றும் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் என்பன என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திணைக்களங்களாகும். இம் மூன்று திணைக்களங்களும் இந்நாட்டிற்கு வருமானம் ஈட்டித் தரும் நிறுவனங்களாக திகழ்கின்றன. இவ்வாண்டு பூராவும் சிறந்த முறையில் சேவைகளை வழங்கி அதனூடாக உயரிய வருமானத்தைப் பெற்றுக்கொள்வதே நோக்கமாக இருந்தது. அதற்கமைய 2015 ஆண்டில் ரூபா 3143 மில்லியன் உயரிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்ததது நாம் பெற்ற வெற்றியாகும்.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தை நோக்கும் போது, முழு நாட்டினதும் அவதானம் அதன் மீது செலுத்தப்படுகின்றது. நான் இவ் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் இலங்கையின் எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் அம் மாவட்டங்களின் மக்கள் மற்றும் அரசாங்க அலுவலர்களுடன் கலந்துரையாடி வனசீவராசிகள் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் எண்ணக்கருக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன். அதன் மூலம் சோமாதிய, சுண்டிக்குளம், ஹல பல்லேகெலே, கலாவெவ போன்ற புதியதேசிய வனப்பூங்காக்களை மீண்டும் செயற்படுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியது. அவ்வாறே பெறுமதி மிக்க விலங்கினங்களையும், மரஞ்செடி கொடிகளையும் பேணிப் பாதுகாத்து சுற்றாடலை நேசிக்கும் மக்களாக நாம் அனைவரும் அணிதிரள்வோம்.

**“மன்னா வானத்தில் பறந்து திரியும் பறவைகளுக்கும், பூமியில் சுற்றித் திரியும் விலங்குகளுக்கும் உன்னைப் போல் பூமி எங்கிலும் வாழ்வதற்கும், சுதந்திரமாக நடமாடுவதற்கும் சம உரிமையுண்டு. சகல உயிரினங்களுக்கும் சொந்தமானதே இப் பூமா தேவி. வெறுமனே நீ அதன் பொறுப்பாளன் மாத்திரமே”**

**(மஹிந்த தேரர் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு)**

**காமினி ஜயவிக்ரம பெரேரா**

**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு**

## கௌரவ பிரதி அமைச்சரின் ஆசிச் செய்தி . . .

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2015 ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சிடைகின்றேன்.

சுற்றாடலைப் பேணிப்பாதுகாத்து சுற்றாடலுக்கு நலன்பயக்கும் விதத்தில் அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்துவது இன்றைய உலகின் பாரிய சவால் மிகுந்த ஓர் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கடந்த 30—40 ஆண்டுகளில் சுற்றாடல் மாசடைந்தமை காரணமாக ஏற்பட்ட விளைவுகளை தற்பொழுது முழு உலகமுமே படிப்படியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் எல்லா நாடுகளிலும் பல்வேறு காலநிலை மாற்றங்கள் காரணமாக அவசர அனர்த்தங்கள், இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு மக்கள் பெரும்பாதிப்புக்களுக்கு உட்பட்டு அவதிப்படுகின்றனர். இந் நிலைக்குக் காரணம், வலுவாதார அபிவிருத்தித் திட்டங்கள் சரியான திட்டமிடலுடன் நெறிப்படுத்தப்படாமையே ஆகும். ஆதலால், வலுவாதார அபிவிருத்தி எனும் விடயம் குறித்து முதன்முதலில் அமைச்சு ஒன்று நியமிக்கப்பட்டதுடன், அதன் கீழ், சுற்றாடலை பேணிப் பாதுகாத்து, சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கென அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மற்றும் கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தீர்மானம் மேற்கொண்டமையானது பாராட்டப்படத் தக்கதாகும்.

அதற்கமைய வலுவாதார அபிவிருத்திச் செயலகம் ஒன்று துரிதமாக ஆரம்பிக்கப்பட உள்ளதுடன், சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளுடன் செயற்படுத்தல், கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகிய பணிகள் யாவும் மேற்படி செயலகத்தின் ஊடாகவே முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், வகசீவராசிகள் பொறுப்பு ஆகிய நிறுவனங்களினால் சுற்றாடல் உள்ளடங்கலாக வனசீவராசிகளையும் பாதுகாப்பதற்காக பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அந் நிறுவனங்களுக்குச் சொந்தமான நாடுபூராவும் பரந்துபட்டுக் காணப்படும் சகல அலுவலர்களும் உட்பட அலுவலர்கள் தமது இன்னுயிரைத் துச்சமென மதித்து இரவு பகல் பாராது செய்யப்படுகின்ற சேவையை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

இலங்கையின் காப்பிட வனசீவராசிகள் வலையமைப்பை தாபித்தல், மலடாகக் கூடிய அச்சுறுத்தலுக்காளாகி இருக்கும் வனசீவராசிகளை பாதுகாத்தல், தேசிய தாவரங்கள் மற்றும் மலர் வகைகளை பகுத்தாய்ந்து பாதுகாப்பு அலுவல்களை மேற்கொள்ளல், மனித வள மற்றும் யானை வளத்திற்கு எதுவித பாதிப்பும் இன்றி யானை மனிதன் மோதலை முடிவுக்கு கொண்டு வருதல் ஆகிய பல விடயங்கள் கௌரவ அமைச்சர் காமினி ஜயவிக்ரம அவர்களின் ஆலோசனைக்கமை தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2015 ஆண்டில் தேசிய தாவரவியல் பூங்காக்களின் கீழ் சீத்தாவக்க உலர் வலய தாவரவியல் பூங்கா உள்நாட்டு வெளிநாட்டு பார்வையாளர்கள் தொடர்பாக திறந்து வைக்கப்பட்டது. மேலும் பார்வையாளர்களுக்காக திறந்தவெளி மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவை தோற்றுவிக்கக் கூடியவாறு பின்னவலை புதிய மிருகக்காட்சிசாலை 2015 ஆண்டில் திறந்துவைக்கப்பட்டது நாம் பெற்ற இன்னொரு வெற்றியாகும்.

வனசீவராசிகள், வனப் பாதுகாப்பு, தாவரவியல் பூங்காக்கள் உட்பட சகல இயற்கை வளங்களும் எமது மரபுரிமைகள் ஆகும். அவை அனைத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும். இவற்றை கண்டு களிப்பதற்கென வருகை தரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் பல வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அதன் வாயிலாக நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் வகையில் கணிசமானளவு வருமானத்தை ஈட்டிக் கொள்ள கூடியதாகவுள்ளது.

மனிதன் உயிர்வாழ்வதற்காக வனசீவராசிகள் மட்டுமன்றி வன வளங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டியது இன்றியமையாததாகும். எனினும் அந்த சவாலை எதிர்கொள்வது என்பது இலேசான காரியமல்ல. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற கௌரவ அமைச்சர், செயலாளர் உட்பட அனைவரும் ஆற்றுகின்ற பணி பாராட்டப்படத் தக்கனவாகும். ஆதலால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, எதிர்கால சந்ததியினருக்காக இயற்கை வளங்களை பேணிப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையும், பொறுப்புமாகும்.

**சுமேதா ஜீ. ஜயசேன**
வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சர்

## செயலாளரின் ஆசிச் செய்தி ...

2015.01.08 ஆந் திகதி நடைபெற்ற தேர்தலின் பின்னர் விளையாட்டுத்துறை மற்றும் சுற்றுலா அமைச்சின் கீழ் இயங்கிய வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு என்பன பாராளுமன்ற பொதுத்தேர்தலின் பின்னர் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு எனும் பெயரில் மீண்டும் தாபிக்கப்பட்டது. ஆசியா பசுபிக் வலயத்தில் வலுவாதார அபிவிருத்தி சம்பந்தமாக தோற்றம் பெற்ற முதலாவது அமைச்சு இதுவாகும்.

வலுவாதார அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு முதநிலை அமைச்சாக செயற்படுவதோடு இவ் அமைச்சின் பொறுப்புக்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் போது, வனசீவராசிகள் பாதுகாப்பு, தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைத் திணைக்களங்களில் மாத்திரமன்றி சுற்றுலா கைத்தொழிலை ஊக்குவிப்பதிலும் ஆர்வம் கொண்டு செயற்பட்டு வருகின்றது. மேற்படி துறைகளில் நிலவுகின்ற சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு 2015 ஆம் ஆண்டின் கடைசி மாதங்களுள் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனூடாக அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்வத்றகு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அது தொடர்பான வழிகாட்டுதல்களை திணைக்களத்துக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வன விலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்திற்கும், அதன் திருத்தங்களுக்கும் ஏற்ப வனவலங்குகள் மற்றும் மக்கள் வசித்துவரும் சுற்றாடல் முறைமை ஒன்றினுள் தொடர்ந்தேச்சையாக வன விலங்குகளின் நீண்டகால இருப்புக்கு உத்தரவாதமளிக்கின்ற பாரிய செயற்பாட்டில் எமது அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசீராசிகள் பாதுகாப்பு திணைக்களம் ஈடுபட்டுள்ளது. 2015 ஆண்டில் திணைக்களத்துக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 810 மில்லியன் தொகை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அத் தொகையில் தற்போது பூதாகாரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ள யானை—மனிதன் மோதலை குறைக்கும் பொருட்டு மின்வேலி அமைப்பதற்கு ரூபா 300 மில்லயன் தொகையும், வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேச வலையமைப்பை வலுவூட்டுவதற்காகவும், வனசீவராசிகளின் வசிப்பிடங்களை வளப்படுத்துமுகமாகவும் ரூபா 150 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அவ்வாறே நாடு பூராவும் பரந்துபட்டுக் காணப்படும் தேசிய பூங்காக்களில் உள்நாட்டு வெளிநாட்டு பார்வையாளர்கள் தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணி தொடர்பாக முன்னுரி வழங்கப்பட்டுள்ளது.

சீத்தாவக்க உலர் வலய தாவரவியல் பூங்காவை 2015 ஆண்டில் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்பாக தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தினால் திறந்து வைக்கப்பட்டது. 2015 ஆண்டில் ரூபா 658 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும், பார்வையாளர்களின் வசதியை மேம்படுத்தும் பொருட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை தெஹிவளை மிருகக்காட்சிசாலை மற்றும் பின்னவலை யானைகள் சரணாலயம் ஆகியவற்றுக்கு மாத்திரம் பார்வையாளர்கள் சென்று வந்தனர். பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், திறந்த மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவினை பார்வையாளர்களுக்கு வழங்கும் வகையிலும், 2015 ஆண்டில் பின்னவலை புதிய மிருகக்காட்சிசாலை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நலன்கருதி திறந்து வைப்பதற்கு தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் முடிந்தது. அவ்வாறே புராதன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவினை முடிவுக்குக் கொண்டு வந்து, மிருகங்களுக்கு சுதந்தரமாக நடமாடக்கூடிய சந்தர்ப்பத்தையும் வழங்கிய முதலாவது மிருகக்காட்சிசாலையான ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா அடுத்த வருடம் திறந்து வைக்கப்பட்வுள்ளது. மேற்படி மிருகக்காட்சிசலைகளின் அபிவிருத்திப் பணிகள் டெர்பாக 2015 ஆண்டில் ரூபா 596 மில்லியன் தொகை திணைக்களத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வனசீவராசிகள், தாவரவினங்கள் மற்றும் விலங்கினங்களை பார்வையிடுவதற்காக வருகை தரும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. 2015 ஆண்டில் மேற்படி பூங்காக்களினால் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 3,143 ஆக உயர் பெறுமானமிக்கதாகும். அதற்கமைய இவ் அமைச்சின் மூலம் தேசிய வருமானத்திற்கு உயர் பங்கிளிப்பு வழங்குகின்றனது.

அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் ஊடாகவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளதுடன், இயற்கையின் மரபுரிமைகளை எதிர்கால சந்ததிகளுக்காக பேணிப் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு பாடசலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், பாதுகாப்பு வலயங்களில் அமைப்பு ரீதியாக வலுவூட்டல், மற்றும் சுற்றாடல் சட்டங்களை பிரபல்யப்படுத்தல் ஆகியன இதனூடாக செயற்படுத்தப்படுகின்ற முக்கியமான செயற்பாடுகளுள் ஒன்றாகும்.

மரஞ் செடி கொடிகளுடன் பின்னிப் பிணைந்த வலுவாதார அபிவிருத்தியை நோக்கிய பயணத்திற்கு பங்களிப்புக்களை வழங்குவதற்கும், அமைச்சின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுகையில் எப்பொழுதும் வழிகாட்டி, ஆலோசனைகளை வழங்குகின்ற வலுவாதார மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா அவர்கட்கும், பிரதி அமைச்சர் சுமேதா ஜீ. ஜயசேன அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். 2015 ஆம் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட அமைச்சின் சகல அலுவலர்களுக்கும்,பதவியணிக்கும் அதனுடன் இணைந்த திணைக்களங்களின் ஊழியர்களுக்கும், அதே நேரம் தேவையான தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றை வழங்கிய அலுவலர்களுக்கும், மொழிபெயர்ப்பு பணியை மேற்கொண்ட அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ஆர்.எம்.டீ.பீ. மீகஸ்முல்ல**
**செயலாளர்**
**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு**

# உள்ளடக்கம்


வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு 13

நிர்வாகப் பிரிவு 15

திட்டமிடல் பிரிவு 17

அபிவிருத்திப் பிரிவு 19

கணக்குப் பிரிவு 22

சட்டப் பிரிவு 26

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் 27

தேசிய மிருகக்காட்சியகத் திணைக்களம் 45

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் 71

இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு 91

# வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

## தொலைநோக்கு

“சகல உயிரினங்களதும், தாவர வகைகளதும் நீடுநிலைத்த இருப்பினை உறுதிப்படுத்தக்கூடிய வலுவாதார தேசமொன்றை கட்டியெழுப்புதல்”


## பணிநோக்கு

“இலங்கையின் உயிர் பல்வகைமை, அனைத்து தாவரங்கள் மற்றும் வனவிலங்குகளின் பாதுகாப்பு தொடர்பாக முழுமையானதும், மிகச் சரியானதுமான தேசிய பொறுப்பினை நிறைவேற்றுவதனூடாக தேசத்தின் வலுவாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவது தொடர்பான கொள்கை வகுத்தலும், செயற்படுத்தலும்”

### பிரதான பணிகள்

- வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள், தாவரவியல் பூங்கா மற்றும் மிருகக்காட்சியகம் ஆகிய விடயங்கள் சார்ந்த கொள்கைகள், வேலைத்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பனவற்றை தயாரித்தலும் பின்கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளலும்
- 1937 இலக்கம் 02 ஐக் கொண்ட விலங்குகள் மற்றும் தாரவங்கள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- 1928 இலக்கம் 31 ஐக் கொண்ட தாவரவியல் பூங்கா கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- 1982 இலக்கம் 41 ஐக் கொண்ட தேசிய மிருகக்காட்சியக பூங்கா கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- வலுவாதார அளவீடுகள் மற்றும் சுற்றாடல் சுட்டிகளைத் தயாரித்தல்
- இலங்கை தாவரப் பாதுகாப்பு, தாவரவியல் பூங்கா பராமரிப்பு மற்றும் பூக்களை பயிரிடல் ஆகியனவற்றை மேம்படுத்தல்
- கால்நடைகள், பறவையினங்கள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்குகளை ஒன்றுதிரட்டல் மற்றும் காட்சிப்படுத்தல்
- வனசீவராசி வளங்களை பேணிப்பாதுகாத்தல்
- வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலா கைத்தொழில் மேம்பாட்டின் போது சுற்றாடல் பாதுகாப்பு குறித்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்
- வனசீவராசிகள் பொறுப்பு, வன விலங்கு பாதுகாப்பு நிதியம், விலங்கினப் பூங்கா பாதுகாப்பு நிதியம், தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியம் சம்பந்தமான நடவடிக்கைகளை செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல்

**அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களும் நிறுவனங்களும்**



# நிர்வாகப் பிரிவு

## அறிமுகம்

இவ் அமைச்சுக்குரியதான பெறுமானமிகு வளமான மனிதவளத்தை சிறந்த முறையில் முகாமைப்படுத்துவதன் ஊடாக அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் நிர்வாக பிரிவின் மூலம் வழங்கப்படுகின்றது.

## பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சினது பொது நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணல்
- அமைச்சினது சகல அலுவலர்களதும் தாபனப் பணிகளை மேற்கொள்ளல்.
- திணைக்களத்தின் தாபனப் பணிகளை உரியவாறு மேற்கொள்வதற்கு அமைச்சினால் போதிய ஒத்துழைப்புக்களை வழங்குதல்
- பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பாராளுமன்ற வினாக்கள் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் ஆகியனவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- அமைச்சின் மனிதவள அபிவிருத்தி தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

## 2015.12. 31 ஆந் திகதியளவில் மேம்பாடு

2015.01.18 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1897/15 இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சுக்களுக்கான விடயங்கள் பகிரப்படும் போது, வனசீவராசிகள் விடயம் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு உட்பட்ட, அது வனசீவராசிகள் பிரிவாக இயங்கியது.

அதற்கமைய 2015 ஆண்டில் வனசீவராசி வளங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் முழுமையாக மாற்றமடைந்ததுடன் நிர்வாகப் பிரிவின் பணிப்பொறுப்புக்களும் மாற்றமடைந்தது.

நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நிர்வாகப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்டன. மீண்டும் 2015.09.21 ஆந் திகதி வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டதுடன், அதற்கமைய மீண்டும் நிர்வாகப் பிரிவிடம் அனைத்துப் பணிகளும் ஒப்படைக்கப்பட்டன. வலுவாதார மற்றும் வனசீவராசிகள் அமைச்சு கொவிஜன மந்திரயவில் தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதனை 2015 ஒக்ரோபர் மாதத்தில் இருந்து செத்சிறிபாயவிற்கு இடமாற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு எடுத்துச் செல்ல வேண்டிய கோப்புக்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லல், தேவையான பொருட்களை தேவை கருதி ஒழுங்குமுறைப்படி எடுத்துச் செல்லல், அது தொடர்பான மனிதவலு, போக்குவரத்து வசதிகள் என்பன நிர்வாகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன. சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வனசீவராசிகள் பிரிவாக இருந்த காலத்தினுள் நிர்வாகப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்குரிய தாபன பிரச்சினைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்.
- 2015-12-31 ஆந் திகதியில் சம்பள ஆண்டேற்றங்களைப் பெறுவதற்கு உரித்துடைய 37 அலுவலர்களின் சம்பள ஆண்டேற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இரு முகாமைத்துவ உதவியாளர்களின் சேவையை நிரந்தரமாக்குவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பிரிவின் நிர்வாகப் பிரிவிற்கு கிடைக்கப் பெறுகின்ற அனைத்து பதிவுத் தபால் கடிதங்களும், சாதாரண தபால் கடிதங்களும் காலதாமதம் இன்றி உடனுக்குடன் குறித்த நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.
- அமைச்சின் 13 பதவிநிலை அலுவலர்களின் தொலைபேசி பட்டியல்கள் மற்றும் பொதுத் தொலைபேசிகள் இரண்டினதும் பட்டியல்களைத் துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளன.
- அலுவலர்களின் விடுமுறைகள் பற்றிய விடயங்கள் அவர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.
- நிர்வாகப் பிரிவின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட நூலகம் மூலம் அமைச்சின் ஆளணியினருக்கு நூல்களை வழங்குவதன் ஊடாக அவர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்துவதற்கும் வாசிப்பு திறனை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- 2015.09.21 ஆந் திகதியின் பின்னர் இவ் அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சியகத் திணைக்களங்கள் ஆகியவற்றின் பிணக்குகள் சம்பந்தமாக நிர்வாகப் பிரிவின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- அமைச்சின் மேலதிக செயலாளரான திரு. எம்.எஸ்.எஸ்.எஸ். பர்னாந்து அவர்கள் சீனாவில் நடைபெற்ற, "South Asia Tourism Corporation and Development" பயிற்சி செயலமர்வு தொடர்பாகவும், சிரேஷ்ட உதவிச் செயலாளரான திரு. எச்.ஏ.வீ.பீ. ஹபன்கம அவர்கள் சீனாவில் இடம்பெற்ற "Environment Protection and Civilization Construction for Developing Countries " எனும் வெளிநாட்டு பயிற்சி செயலமர்வு தொடர்பாகவும் கலந்து கொண்டனர். மேலும், அமைச்சின் உதவிச் செயலாளரான செல்வி. எம்.டீ.எம். குமுதினி அவர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்தில், "Master of Public Administration" பட்டப்படிப்பினை மனிதவள அபிவிருத்தி ஒதுக்கீட்டின் துணையுடன் தொடர்ந்தார்.

# திட்டமிடல் பிரிவு

## அறிமுகம்

அமைச்சின் அபிவிருத்திப் பணிகள் இப்பிரிவின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கேற்ப தேசிய தேவைப்பாடுகளை இனங்கண்டு, அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்படுவதுடன் அத்திட்டங்களை அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் நாடு பூராவும் நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அதன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான திட்டமிடல் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சின் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல்.
- செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே இணைப்புப் பணிகளை மேற்கொண்டு மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முழுமையான மேம்பாட்டை அடைந்துகொள்ளல், தகவல்களை மீளாய்வு செய்து மேம்பாட்டு மீளாய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் மேம்பாட்டு மீளாய்வு கூட்டங்களை நடத்துதல்.
- இவ் அமைச்சுடன் இணைந்த திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் மூலதனச் செலவின மதிப்பீடு தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அந்நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்ளை கண்காணித்தலும் செயற்படுத்தலும்.
- இவ் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்திப் முன்மொழிவுகள் தயாரிக்கும் போது தேவையான ஆலோசனைகளை வழங்குவதுடன் அவற்றை நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்
- 50 மில்லியன் ரூபா தொகையை விட அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாடு தொடர்பாக நிதி அமைச்சுக்கு அறிக்கையிடல்.
- அமைச்சின் பாதீட்டுக் குழுவின்போது வழங்கும் பொருட்டு செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல்
- ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல்
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நிரல் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்
- அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இற்றைவரையாக்கல்.

## 2015.12.31 ஆந் திகதிக்கான மேம்பாடு

- 2015 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் காலாண்டு ரீதியான மேம்பாட்டு மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- 50 மில்லியன் ரூபா பெறுமதிக்கு அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாடு பற்றி நிதி அமைச்சுக்குக் அனுப்பப்பட்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நிறுவகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
- பாதீட்டு குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கென 2015.09.30 ஆண்டின் மேம்பாடு உள்ளடங்கிய செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நிரல் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்

# அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

2015.09.21 இப்பிரிவின் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு புதிதாகத் தாபுக்கப்பட்டதன் பின்னர், இப் பிரிவின் மூலம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவிரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சியக திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை முறைசார்ந்தவாறும் விளைதிறனானவாறும் செயற்படுத்தல் மற்றும் அமைச்சின் பேணல் பணிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தல்

## பணிப்பொறுப்புக்கள்

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவிரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சியக திணைக்களம் ஆகியனவற்றுக்கு உரியதான பணிளை நடைமுறைப்படுத்தும் போது தேவையான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவிரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சியக திணைக்களம் ஆகியன தொடர்பாக அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல்.
- சனாதிபதி செயலகத்திற்குப் கிடைக்கப் பெறுகின்ற வனசீவராசிகள், தாவரவியற் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சியகம் ஆகிய விடயங்கள் சம்பந்தமான பொதுமக்களின் முறைப்பாடுகளை தீர்த்துவைக்கும் பொருட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவிரவியல் பூங்காக்கள் திணைக்களம், தேசிய மிருகக்காட்சியக திணைக்களம் ஆகியனவற்றுக்கு சொந்தமான காணிகள், தொல்பொருளியல் காப்பிடங்களை அண்டிக் காணப்படுகின்ற பிரச்சினைகள், காப்பிடங்களில் வசிக்கின்ற மக்களின் பிரச்சிகைளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவிரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சியக திணைக்களம் ஆகியனவற்றுக்கு சொந்தமான காணிகளை சுவீகரித்தல், சுவீகரிக்கப்படும் காணிகள் தொடர்பாக நட்டஈடு வழங்குவதற்கு சிபார்சு செய்தல்
- தேசிய வனப்பூங்காக்கள், தாவிரவியல் பூங்காக்கள் மற்றும் தேசிய மிருகக்காட்சியகம் ஆகியனவற்றினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், மின்வேலிகள் அமைத்தல், காட்டு யானைகள் தரிப்பிட நிலையம் நிர்மாணித்தல், வாழ்விடங்களை வளப்படுத்தல் ஆகிய பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகள்.
- வனசீவராசிகள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சியகம் ஆகியனவற்றுக்கு உரியதான அலுவல்கள் மற்றும் இவ் அமைச்சின் விடயப் பணிகள் குறித்து பிற அமைச்சுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அவதானிப்புக்களை முன்வைத்தல்.
- காட்டு யானை அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் மக்களுக்காக தயாரிக்கப்படுகின்ற உத்தேசக் காப்புறுதித் திட்டம் சம்பந்தமாக கொள்கைசார் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்தழைப்பு வழங்குதல்
- விக்டோரியா, ரன்தெனிகல, ரன்டபே சரணாலய எல்லைகளை மீள அடையாளமிடும் பணிகளை மேற்கொள்ளல்.
- காட்டு யாணைகளின் அச்சுறுத்தல் காரணமாக நிகழ்கின்ற உயிரிழப்பு மற்றும் ஏனைய இழப்பீடுகள் தொடர்பாக நட்டஈடு வழங்குவதற்குத் தேவையான கொள்கைரீதியான தீர்மானங்களை முன்னெடுத்தல்.
- குரங்குகள் மற்றும் செங்குரங்குகள் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆய்வு மற்றும் அதற்கான சிபார்சு.
- யானைகளின் பாதுகாப்பு சம்பந்தமான அலுவல்கள்

- சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்
- நீர் வளங்கள் முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்
- இடர் முகாமைத்துவ திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 2014 - 2018 அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தல்
- பழக்கப்பட்ட யானைக் குட்டிகள் மற்றும் பிற வனசீவராசி விலங்குகள் சம்பந்தமான கோரிக்கைகள் பற்றிய அலுவல்களை ஒருங்கிணைத்தல்
- கடல்வாழ் முலையூட்டிகள் சம்பந்தமான பாதுகாப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் அனைத்துவித பேணல்சார்ந்த பணிகளை மேற்கொள்ளலும் அது தொடர்பாக தேவைப்படும் மதிப்பீடுகளை தயாரித்தல், சிபார்சு செய்தல் மற்றும் கொடுப்பனவு தொடர்பாக சிபார்சு வழங்கல்.
- அமைச்சிற்குரிய வளிச்சீராக்கி, தொநலைகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் கணனிகளின் பேணல் பணிகளை மேற்கொள்ளல்

## 2015. 12.31 ஆந் திகதியளவிலான மேம்பாடு

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பில் கிடைத்த 35 பொது முறைப்பாடுகள் பற்றி விசாரிப்பதற்காக அந்த முறைப்பாடுகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டதுடன் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- சனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கப் பெறுகின்ற வனசீவராசிகள், தாவரவியல் பூங்காக்கள், மிருகக்காட்சியகங்கள் ஆகிய விடயம் சம்பந்தமான பொதுமக்களின் 09 முறைப்பாடுகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு அது தொடர்பாக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் வெளி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையில் நிலவிய 5 பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் நிமித்தம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தேசிய வனப் பூங்காக்களில் குளங்கள் புனரமைப்புக்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து ஒரு நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டதன் மூலம் வனசீவராசிகள் திணைக்களத்தின் 15 வாவிகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் பொருட்டு தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்பு விடயம் பற்றி ஏனைய அமைச்சுகளினால் முன்வைக்கப்பட்டிருந்த 02 அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பான அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் மக்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற காப்புறுதித் திட்டம் பற்றி பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களம், வரவுசெலவுத்திட்ட திணைக்களம், கமநல காப்புறுதிச் சபை என்பவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு உரிய விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- நீர் வளங்கள் முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் கலந்து கொள்ளல்
- வனசீவராசிகள் பாதுகாப்பு, வனப் பூங்காக்கள் மற்றும் தாவரவியங் பூங்காக்கள் சம்பந்தமான பொதுப் பணிகளில் ஈடுபடல்
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தாவரவியற் பூங்காத் திணைக்களம் மற்றும் மிருகக்காட்சிசாலையகத் திணைக்களம் ஆகியனவற்றுக்கு உரியதான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரியதான காணி சுவீகரித்தல் தொடர்பான 14 அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- தேசிய மிருகக்காட்சியகத் திணைக்களத்துக்கு சொந்தமான பின்னவளை புதிய மிருகக்காட்சியகத்தினால் சுவீகரிக்கப்படவுள்ள மற்றும் தற்போது சுவீகரிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட 16 காணிகளை சுவீகரிக்கும் செயற்பாட்டின் பிரச்சினைகள் இற்றைவரையாக்கப்பட்டு வருகின்றன.
- வனசீவராசி வளங்கள் அமைச்சுக்கு உரியதான ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 02 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அவதானிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- இந்த அமைச்சின் அலுவலக அறைகளுக்கு 23 குளிரூட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை சேவிஸ் பண்ணப்படுகின்றன. சேவை ஒப்பந்தத்தைச் செய்வதற்கு இந்த ஆண்டில் 24,912.99 ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அத் திருத்தங்களுக்கான தேவையேற்படுகின்ற சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பாக ரூபா 44,721.90 செலவிடப்பட்டுள்ளது. மேலும், அமைச்சு செத்சிறிபாய கட்டிடத்தில் தாபிக்கப்பட்டதன் பின்னர் கொவிஜன மந்திரய கட்டிடத்தில் இருந்த Frostaire வகையைச் சார்ந்த 09 வளிச்சீராக்கிகள் மற்றும் Panasonic வகையைச் சார்ந்த 08 வளிச்சீராக்கிகள் கழற்றி எடுத்துவரப்பட்டு 09 ஆம் மாடியில் பொருத்தப்பட்டன. Frostaire வகையைச் சார்ந்த 09 வளிச்சீராக்கிகள் கழற்றி எடுத்துவரப்பட்டு மீளப் பொருத்துவதற்கு ரூபா 248,568.85 செலவிடப்பட்டுள்ளது.
- அமைச்சின் 03 நிழற்பிரதி இயந்திரங்கள் தொடர்பான சேவை ஒப்பந்தம் தொடர்பாக 2015.12.31 ஆம் திகதியளவில் 36,421.89 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்பட்டுள்ளன.
- அமைச்சின் 05 தொலை நகல் இயந்திரங்கள் தொடர்பான சேவை ஒப்பந்தம் தொடர்பாக 2015.12.31 ஆம் திகதியளவில் 34,299.00 ரூபா தொகை செலுத்தப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கு 04 தடவைகள் சேவிஸ் பண்ணப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இவ் இயந்திரங்களின் பழுதுபார்த்தல் வேலைகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பாக ரூபா 13,098.00 தொகை செலவிடப்பட்டுள்ளது.
- கணனிகளின் பழுபார்ப்புப் பணிகள் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தேசிய மிருகக்காட்சியக திணைக்களத்துக்கு விசேட விலங்குகளை பிடிப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு போதிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தெஹிவளை மிருகக்காட்சியகத் திணைக்களத்துக்கு விசேட விலங்குகளைப் பிடிப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு போதிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தெஹிவளை மிருகக்காட்சியகதில் மிருகங்கள் இறப்பது தொடர்பாக சம்பந்தமாக பரிசீலனை செய்யும் பொருட்டு அமைச்சினால் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது இறந்த 3 வகையான விலங்குகள் தொடர்பாக குழுக்கள் நியமிக்கப்பட்டு பரசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- சிவனொளிபாத மலையை அண்டியதாக புதிய தாவரவியற் பூங்கா ஒன்றினைத் தாபிப்பதற்கு போதிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும், கண்காணித்தலும்.

# கணக்குகள் பிரிவு

## அறிமுகம்

அமைச்சின் கணக்குப் பிரிவானது, கொடுப்பனவு, பெறுகை, களஞ்சியம் மற்றும் வள முகாமைத்துவம், கணக்குகள் ஆகிய 04 பிரதான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. பாராளுமன்றத்திற்கு பதிலளிப்பதற்கான கடப்பாடு கொண்ட வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் செயலாளர் பிரதான கணக்கீட்டு அலுவலராக நிறைவேற்ற வேண்டிய அமைச்சினதும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களின் நிதிக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்குத் தேவையான நேரடி ஒத்துழைப்புக்களை வழங்குவது இவ் அமைச்சின் பிரதான கடப்பாடாகும். அதற்கமைய அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினதும் நிதிக் கட்டுபாட்டு நடவடிக்கைகளை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் மற்றும் அதற்கு உரியதான கட்டுப்பாட்டுப் பணிகள் இப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டம் தயாரித்தல், ஒதுக்கீட்டு கணக்குக்கு உரியதான வருமதி செல்மதி மதிப்பீடுகளைத் தயாரித்தல், அவற்றை திறைசேரியின் உரிய திணைக்களங்களுடன் ஒருங்கிணைத்தல், ஆண்டிற்கான நிதிப்பாய்ச்சல் கட்டுப்பாடு, பெறுகைப் பணிகள், களஞ்சிய மற்றும் வள முகாமைத்துவம், கொடுப்பனவுப் பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கொடுப்பனவு செய்தல், காலோசிதமான நிதி அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வாளர் அதிபதி மற்றும் அரசாங்க கணக்குகள் தொடர்பான செயற்குழுவுடன் இணைந்த பணிகளை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பாக செயற்படுத்துவது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## பணிப்பொறுப்பு

- ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள செலவினம், நிதிப் பிரமாணம், கட்டளைச் சட்டம், சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் ஆகியவற்றுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு முகாமைத்துவப்படுத்தல்.
- கணக்காய்வாளர் அதிபதி மற்றும் பொதுத்திறைசேரிக்கு அவசியமான மாதாந்த, காலாண்டு, அரையாண்டு வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுக் கணக்கு உட்பட இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்
- களஞ்சியசாலை மற்றும் வள முகாமைத்துவம்
- வருடாந்த செலவினம் மற்றும் வருமான மதிப்பீடு தயாரித்தல்

- அமைச்சுக்கு உரியதான வேதனம், பொதுவைப்புக் கணக்கு உட்பட சகல மூலதன மற்றும் மீண்டுவரும் கொடுப்பனவுப் பணிகளை மேற்கொள்ளலும், செலவின முகாமைப்படுத்தலும்.
- அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினதும் பெறுகைக்குழு நியமித்தல் மற்றும் பெறுகைசார் பணிகளை நிறைவேற்றல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்.
- அமைச்சினது நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான கணக்குகள் பணிகள் மற்றும் அமைச்சின் கீ இயங்குகின்ற நிறுவனங்களின் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேட்டு அறிக்கை தயாரித்தல், அறிக்கையிடல், சீராக்கம் செய்தல் மற்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல்
- அமைச்சினதும், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினதும் உரிய அரசாங்க கணக்குத் தெரிவுக் குழுவுக்கும் அரசாங்க வியாபாரத் தெரிவுக்குழுவுக்கும் உரியதான பணிளை ஒருங்கிணைத்தல்.
- அமைச்சினது மாதாந்த, வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல், அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களினது வருடாந்த கணக்குகள் மற்றும் அறிக்கைகளை கண்காணித்தல்.
- அரசாங்க அலுவலர்களின் முற்பண பீ கணக்கிலிருந்து கடன் வழங்கல், அவற்றை உரியவாறு அறவிடல் மற்றும் அதற்கு உரியதான கணக்குகளைப் பேணல்.
- கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு விசாரணகைள் சம்பந்தமான அமைச்சினது பணிகள்.
- ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் அலுவல்கள், பிரதான கட்டுநிதி, இடைக்கால கட்டுநிதி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு, கணக்கு வைத்தல் மற்றும் அறிக்கையிடல்.
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களின் நிதியங்களை கட்டுப்பாட்டுப் பணிகள் மற்றும் கணக்குகள் தொடர்பான பணிகள் என்பனவற்றின் கண்காணிப்புப் பணிகளை நிறைவேற்றல், அவற்றின் வரவு செலவுத்திட்ட மற்றும் ஆண்டிற்கான கணக்குகள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2015.12.31 ஆந் திகதிய மூலதனச் செலவினம்

| வகுதி / விடயம் உருப்படி | 2015 மதிப்பீடு | 2015.12.31 ல் செலவு (ரூ.) | 2015.12.31 ல் மீதித் தொகை (ரூ.) | மேம்பாடு |
|---|---|---|---|---|
| **மூலதனச் செலவினம்** | **16,931,685.00** | **12,144,717.51** | **4,786,967.49** | **72** |
| மூலதனச் செலவின புனரமைப்பும் மேம்பாடும் | **7,600,000.00** | **3,787,533.51** | **3,812,466.49** | 50 |
| கட்டிட நிர்மாணம் | 2,000,000.00 | 892699.75 | 1,107,300.25 | 45 |
| பொறியும், பொறித்தொகுதியும் | 800,000.00 | 0 | 800,000.00 | 0 |
| வாகனங்கள் | 4,800,000.00 | 2894833.76 | 1,905,166.24 | 60 |
| மூலதனச் சொத்துக் களின் கொள்ளல் | **7,831,685.00** | **7,425,934.00** | **405,751.00** | **95** |
| வாகனங்கள் | | 0 | 0.00 | |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 7,431,685.00 | 7,383,935 | 47,750.00 | 99 |
| பொறியும், பொறித்தொகுதியும் | 400,000.00 | 41,999 | 358,001.00 | 10 |
| **இயலளவு விருத்தி** | **1,500,000.00** | **931,250.00** | **568,750.00** | **62** |
| ஆளணியினருக்கான பயிற்சி | 1,500,000.00 | 931,250 | 568,750.00 | 62 |
| பிற மூலதனச் செலவினம் | **0.00** | **0.00** | **0.00** | |
| முதலீடு (வலுவாதார அபிவிருத்தி செயலகம்) | 0.00 | 0 | 0.00 | |
| **மொத்தச் செலவினம்** | **117,630,000.00** | **103,297,435.40** | **14,332,564.60** | **88** |

## வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2015.12.31 ஆந் திகதிய மீண்டுவரும் செலவினம்

| வகுதி / விடயம் உருப்படி | 2015 மதிப்பீடு | 2015.12.31 ல் செலவு (ரூ.) | 2015.12.31 ல் மீதித் தொகை (ரூ.) | மேம்பாடு |
|---|---|---|---|---|
| **மீண்வரும் செலவினம்** | **100,698,315.00** | **91,152,717.89** | **9,545,597.11** | **91** |
| தனியாள் வேதனாதிகள் | **52,043,000.00** | **50,814,455.05** | **1,228,544.95** | **98** |
| வேதனங்களும் படிகளும் | 23,993,000.00 | 23332987.77 | 660,012.23 | 97 |
| மேலதிக மற்றும் விடுமுறைப் படி | 2,470,000.00 | 2044249 | 425,751.00 | 83 |
| பிற கொடுப்பனவுகள் | 25,580,000.00 | 25437218.28 | 142,781.72 | 99 |
| பிரயாணச் செலவுகள் | **2,594,000.00** | **1,906,030.56** | **687,969.44** | **73** |
| உள்ளூர் | 1,050,000.00 | 556030.56 | 493,969.44 | 53 |
| வெளிநாடு | 1,544,000.00 | 1350000 | 194,000.00 | 87 |
| வழங்கல்கள் | **9,917,600.00** | **7,708,124.69** | **2,209,475.31** | **78** |
| களஞ்சிய பொருட்கள், காகிதாதிகள் | 2,061,000.00 | 1697481.07 | 363,518.93 | 82 |
| எரிபொருள் | 7,069,600.00 | 5494180.12 | 1,575,419.88 | 78 |
| ஆகாரம் மற்றும் சீருடை | 748,000.00 | 516463.5 | 231,536.50 | 69 |
| பிற | 39,000.00 | 0 | 39,000.00 | 0 |
| **பராமரிப்புச் செலவினம்** | **8,190,400.00** | **7,950,418.61** | **239,981.39** | **97** |
| வாகனங்கள் | 6,710,400.00 | 6709689.26 | 710.74 | 100 |
| பொறியும், பொறித்தொகுதியும் | 1,110,000.00 | 939014.35 | 170,985.65 | 85 |
| கட்டிட நிர்மாணம் | 370,000.00 | 301715 | 68,285.00 | 82 |
| **சேவைகள்** | **27,303,315.00** | **22,551,125.65** | **4,752,189.35** | **83** |
| போக்குவரத்து | 3,025,000.00 | 2029778.24 | 995,221.76 | 67 |
| அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 1,520,000.00 | 893540.98 | 626,459.02 | 59 |
| மின்சாரம் மற்றும் நீர் | 1,872,000.00 | 959283.25 | 912,716.75 | 51 |
| வாடகை மற்றும் உள்ளூர் வரி | 17,068,315.00 | 15146054.89 | 1,922,260.11 | 89 |
| பிற | 3,818,000.00 | 3522468.29 | 295,531.71 | 92 |
| மாற்றல்கள் | **650,000.00** | **222,563.33** | **427,436.67** | **34** |
| ஆதனக் கடன் வட்டி | 650,000.00 | 222563.33 | 427,436.67 | 34 |

# சட்டப் பிரிவு

## பணிப்பொறுப்பு

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் சம்பந்தமாக அமைச்சினால் நிறைவேற்ற வேண்டிய சட்ட விடயங்களைக் கண்காணிப்பதனூடாக உயர் முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கல்.

- 1937 இன் 07 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தை (469 அதிகாரம்) 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலை சட்டம் மற்றும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், அந்தச் சட்டங்களுக்குத் தேவையான ஒழுங்கு விதிகள், கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் என்பன தொடர்பான ஆலோசனைப் பணிகளை நிறைவேற்றுதல் ஆகியன இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
- அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களினால் காலந்தாழ்த்தப்படும் சட்ட விடயங்கள் தொடர்பிலும், அமைச்சுக்குக் கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகள் என்பன தொடர்பிலும் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைளை துரிதமாக மேற்கொள்ளல்.
- அமைச்சு மற்றும் திணைக்களங்கள் தொடர்பாக நிலவுகின்ற வழக்குகள் சம்பந்தமாக சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் நடத்தப்படும் ஆலோசனை ரீதியான கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளல் மற்றும் போதிய கண்காணிப்பு பணிகள் இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
- மேலும், சட்ட ஆலோசனைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஏனைய வழக்கு விடயங்கள் என்பவற்றின் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் இந்தச் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
- தேசிய காப்பிட பூமி, தடைசெய்யப்பட்ட காடுகள், தேசிய வனப்பூங்காக்கள், இயற்கையான காப்பிட பூமி, வன நுழைவாயில், பாதுகாப்பான இடங்கள், சமுத்திர காப்பிட பகுதிகள், எல்லைகளுக்கிடையேயான வலயங்கள் மற்றும் அபயபூமிகள் என்பனவற்றின் எல்லைகளை மிகச் சரியாக இனங்காண்பதற்கான உரிய பணிகளை வகுப்பதற்கு திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- அமைச்சுக்கும் திணைக்களத்துக்கும் எதிராகவும், திணைக்களத்தினால் தொடரப்படுகின்ற வழக்குகள் தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்குவதோடு அவ் வழக்குகள் தொடர்பான கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- பொது மக்களினாலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று சட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் அதிகாரியின் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், செய்யப்படும் பல்வேறுவிதமான முறைப்பாடுகளை ஆராய்வது இப் பிரிவின் கடப்பாடாகும். பொது மக்களுக்கு கட்டளைச் சட்டத்திலுள்ள விடயங்கள் சம்பந்தமான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## அறிமுகம்



இலங்கையின் பாரிய பல்லுயிர்த்தன்மைக்கு கட்டியம் கூறுகின்ற இவ்வாறான தாவரங்கள் மற்றும் கால்நடைகளையும் மனிதர்கள் வாழ்கின்ற சுற்றாடலையும் பாதுகாக்க வேண்டிய பிரதான பொறுப்பு வனசீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1949 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வனசீவராசிகள் திணைக்களத்தின் பிரதான கடப்பாடு என்னவெனில், அது இலங்கையில் உள்ள வனசீவராசி வளங்களைப் பாதுகாப்பது ஆகும். அதற்கமைய இலங்கையின் அனைத்து ஆற்று மூலங்களையும் விவசாயத்துறை மற்றும் மின்சார உருவாக்கம் தொடர்பாக நீரை வழங்குகுன்ற பாரியவிலான நீர்த்தேங்கள் உட்பட 40 நீர்த்தேக்கங்களின் நீரேந்துப் பகுதிகள் பாதுகாக்கப்படுவது வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பின் ஊடாகவே ஆகும். இந் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13% ஐ விஞ்சிய வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பு முகாமைப்படுத்தப்படும் போது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமே அதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது. அவ் வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பு பல்வேறு பாதுகாப்பு மட்டங்களின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட வனசீவராசிகள் காப்பிடங்களையும் உள்ளடக்கியுள்ளன.

## தொலைநோக்கு

‘‘இன்றைய மற்றும் நாளைய சந்ததியினருக்காக வனசீவராசி வளங்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாத்தல்”

## பணிநோக்கு

‘‘அனைவரும் ஒன்றிணைந்து தொழில் சார்ந்த ஒரு முகாமைத்துவத்தினூடாக வனசீவராசி வளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்”

## பணிப்பொறுப்பு

- அனைத்து பூகோள, காலநிலை மற்றும் பல்லினத்தன்மை வலையங்களினுள் வனசீவராசி வளங்களை போதியளவில் உள்ளடக்கியுள்ள இலங்கை வனசீவராசிகள் வனப் பாதுகாப்பு வலையமைப்பை தாபித்தலின் மூலம் அவற்றின் ஸ்திரத்தன்மையை பேணல்.
- விவசாயத்துறை, நீர் மின்சார உருவாக்கம் தொடர்பாக நீர் வழங்குகின்ற பாரியளவிலான நீர்த்தேங்களின் நீரேந்துப் பிரதேசங்களை பாதுகாத்தல், சமய மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பேணல், தனித்துவமான அரிதான வனசீவராசிகளை பாதுகாத்தல், விசேட சுற்றாடல் முறைமைகளை பாதுகாத்தல் ஆகிய விசேட நோக்கங்களைக் கொண்டுள்ள வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டு வனசீவராசிகள் ஒதுக்கிடங்கள் வலையமைப்பை உரியவாறு முகாமைப்படுத்தல்.
- மலடாக கூடிய அச்சுறுதலுக்கு ஆளாகியுள்ள தேசிய வனசீவராசிகளை பாதுகாப்பது தொடர்பாக தகுந்த செயன்முறைகளை கையாண்டு விசேட செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவ்வுயிரினங்களின் நீண்டகால இருப்புக்கு உத்தரவாதமளித்தல்
- வனசீவராசிகள் காப்பிடங்களிலில் இருந்து வெளிப் பிரதேசங்களில் பாதுகாப்பாக வாழக்கூடியவாறு வனசீவராசிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- தற்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தேசிய வனசீவராசிகள் கொள்கை மற்றும் சட்டத்தை விளைதிறன் வாய்ந்த முறையில் கையாளல்.
- இலங்கை அரசாங்கத்தினால் கையொப்பமிடப்பட்டுள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு குறித்து மலடாகக் கூடிய வாய்ப்புள்ள அரிய உயிரினங்களின் வியாபாரம் தொடர்பான சமவாயம் (CITES), சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரலிப்பு பிரதேசங்கள் தொடர்பான சமவாயம் (Ramsar) மற்றும் குடிபெயரும் கால்நடைகளின் பாதுகாப்பு தொடர்பான சமவாயம் (CMS - Bonn) ஆகிய சர்வதேச சமவாயங்களின் செயற்பாடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய செயற்படுதல்.
- வனசீவராசிகள் காப்பிடங்களுக்கு அருகே சுற்றாடல் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு அதன் பங்களிப்பை வழங்க முடியும்.
- வனசீவராசி வளங்களின் பாதுகாப்பு மற்றும் விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவம் தொடர்பான தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளல்.
- இயற்கை வளங்களை பாதுகாப்பதை நோக்காகக் கொண்ட பிற நிறுவனங்களின் ஒத்தழைப்புடன் அன்னியோன்ய புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதனூடாக பாதுகாப்பு செயற்பாடுகளை வலுப்படுத்தல்.
- பொதுமக்கள், அரச அலுவலர்கள் ஏனைய குழுக்கள் ஆகியோருக்கிடையே வனசீவராசிகள் பாதுகாப்பினை விஸ்தரிப்பதனூடாக அவர்களின் பங்களிப்புக்களை பெற்றுக்கொள்வதை இலக்காகக் கொண்ட வனசீவராசிகள் பாதுகாப்பு கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- வனசீவராசிகள் காப்பிடங்களுக்குள் இயற்கை வளங்களைச் சுற்றி வாழ்விடங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு சமூக பொருளாதார நிழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்பாடு

## 1. மின்வேலிகள் அமைத்தல்

**நோக்கம்**

- யானை – மனிதன் என்ற பிரச்சினையை ஓரளவுக்கு குறைத்தல்
- யானை – மனிதன் என்ற பிரச்சினையைக் குறைப்பது தொடர்பான மூலோபாய அபிவிருத்தியும் திறன்விருத்தியும்




**2015 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 300.00**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 275.82**

**பௌதீக முன்னேற்றம்**

- 216 கி.மீ. நீண்ட மின் வேலிகளின் நிர்மாணிப்புக்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- மேலும் 120 கி.மீ. நீண்ட மின்வேலிகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு, வனசீவராசி வளங்கள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
- காப்பிட பிரதேசங்களில் புற்தரை முகாமைத்துவம் தொடர்பாக 100 Glass Cutter கொள்வனவு செய்யப்பட்டன.
- ஹொரவபொத்தானை யானைகள் பாதுகாப்புப் பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் முடிவுறுத்தப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.

## 2. காப்பிட பிரதேச வாழ்விடங்களை செழுமைப்படுத்தல்




**2015 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 161.6**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 145.28**

**பௌதீக முன்னேற்றம்**

- காப்பிட பிரதேச வாழ்விடங்களை செழுமைப்படுத்தலின் கீழ், 300 ஹெக்ரயார் பரப்பில் படர்ந்துள்ள தாவரங்களை அகற்றப்பட்டுள்ளன.
- தேசிய பூங்காக்களில் 100 கி.மீ. நீண்ட பாதைகளின் இருமருங்கிலும் மற்றும் 86 ஹெக்ரயார் பரப்பில் அடிப்புதர்கள் அகற்றப்பட்டுள்ளன.
- உடவளவை தேசிய பூங்காவினுள் வரட்சிக் காலங்களில் தீ பரவுவதைத் தவிர்க்குமுகமாக 20 கி.மீ. நீளமான தீப் பட்டிகளின் பேணல் நடவடிக்கைகள்.
- காப்பிட பகுதியினுள் அமைந்துள்ள 16 வாவிகளின் திருத்தப் பணிகள் மற்றும் 11 நீர்க் குழிகள் அமைக்கப்பட்டு முடிவடைந்துள்ளன.
- 2015 ஆம் ஆண்டில் ஈரலிப்பு நில தினம் வெகு விமரிசையாக வில்பத்து தேசிய பூங்காவில் நடைபெற்றதுடன், அதற்கு நிகராக "வனதிவி தெத் பிம்" சஞ்சிகையின் 2000 பிரதிகள் அச்சிடப்பட்டன.
- சூரிய ஒளியினால் இயங்குகின்ற 06 நீர் விநியோக முறைமைகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அதில் 03 உடவளவை, வில்பத்து மற்றும் புத்தள தேசிய பூங்காக்களில் தாபிக்கப்பட்டன.
- வனசீவராசிகள் காப்பிட பிரதேசங்களில் முகாமைத்துவ பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு 75 GPS இயற்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- வனசீவராசிகள் காப்பிட பிரதேசங்களில் படர்ந்துள்ள தாவரங்களை அகற்றுவது மற்றும் புற்தரை முகாமைத்துவம் தொடர்பாக 10 Rotary Slasher மற்றும் 25 Grass cutter கொள்வனவு செய்யப்பட்டன.

## 3. காப்பிட பிரதேச பாதை முறைமையை மறுசீரமைத்தலும் அபிவிருத்தி செய்தலும்





**2015 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 31.50**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 15.91**

**பௌதீக முன்னேற்றம்**

- தேசிய பூங்காக்களில் பாதை அபிவிருத்தியின் கீழ் 27 சப்பாத்துப் பாலங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- தேசிய பூங்காக்களில் பாதை அபிவிருத்தியின் கீழ் 95 கி. மீற்றருக்கான பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், தங்கமலை பீட்டு அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (மத்திய) அலுவலகத்தினதும், கீர்த்திபண்டாரபுர அடவி அலுவலகத்தினதும் நுழைபாதையின் (1 கி.மீ) அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன..

## 4. காப்பிட பிரதேசங்களை எல்லையிடல்

**2015 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 32.00**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 21.23**






**பௌதீக முன்னேற்றம்**

- வனசீவராசிகள் காப்பிடங்கள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவது தொடர்பாக 420 பதாதைகள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன.
- டெல்ஃப் மற்றும் ஆதாம் பாலம் ஆகியனவற்றை புதிய தேசிய பூங்காக்களாகவும், சுண்டிக்குளம் மற்றும் மடு வீதி அபயபூமிகளை தேசிய பூக்காக்களாகவும் பிரகடனப்படுத்தப்பட்டன.
- 138 கி.மீ. நீண்ட காப்பிட எல்லைக் குறியிடல் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- காப்பிட பிரதேசங்களின் எல்லைக் குறியிடல் தொடர்பாக2,400 புதிய எல்லைக் கம்பங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

## 5. பிற ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள்

### மொரகஹகந்தை செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்கள்

மொரகஹகந்தை–களுகங்கைக் செயற்திட்டத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 2008 ஆம் ஆண்டு முதல் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் களுகங்கை ஆற்று வடிநிலப் பகுதியில் பின்வரும் நோக்கங்களுக்காக வனசீவராசிகள் பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## நோக்கங்கள்

- களுகங்கை மற்றும் உத்தேச மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை அண்டிய தூண்டல் வலயமொன்றை பிரகடனப்படுத்தல் மற்றும் அங்கு மனித நடமாட்டங்களை குறைத்தல்.
- மேற்படி பிரதேசத்தில் வனவிலங்குகள் – மனிதன் பிரச்சினையை குறைப்பதற்காக வனசீவராசி தடைகளை அமைத்தல் ( மின் வேலிகள், அகழிகள் தோண்டல்)
- வனசீவராசிகள் மனிதன் பிரச்சினையை குறைப்பதற்காக விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தில் வனசீவராசி வாழ்விடங்களை மேம்படுத்தல்
- விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தை அண்டியுள்ள வனசீவராசி காப்பிடங்களில் சுற்றாடல் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல்
- விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தை அண்டியுள்ள வனசீவராசி ஒதுக்கிடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.

**2015 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி - ரூ.மில். 40.00**

**நிதி முன்னேற்றம் - ரூ.மில். 18.90**

**பௌதீக முன்னேற்றம்**

- வஸ்கமுவ தேசிய பூங்காவில் 22 கி.மீ. நீண்ட பாதை அபிவிருத்திப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- வஸ்கமுவ, கவுடுல்ல, அங்கம்மெடில்ல தேசிய பூங்காக்களின் 4 சுற்றுலா பங்களாக்களினதும், 8 நிர்வாக கட்டிடங்களினதும், 02 முகாம் தரைகள், 02 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் ஆகியனவற்றின் திருத்தப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 36 வனசீவராசிகள் சுற்றுலா பங்களாக்களின் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- வஸ்கமுவ தேசிய பூங்காவில் 25 ஹெக்ரயார் பரப்பின் கீழ் படர்ந்து காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டுள்ளன.
- வரட்சிக் காலத்தில் காடுகள் தீப்பற்றுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக 04 கி.மீ. நீளமான தீப் பட்டிகளை தாபித்தல் மற்றும் முகாமைத்துவ பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- 56 கி. மீ நீளமான மின்வேலிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.
- காப்பிடப் பிரதேச முகாமைத்துவத்தினை இலகுபடுத்துவது தொடர்பாக தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு 15 GPS இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- வனசீவராசிகள் அலுவலர்கள் தொடர்பாக 10 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப் பட்ட பிற நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் 2015.12.31 ஆந் திகதியளவில்**

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1. | **ஒதுக்கிட பிரதேச வலையமைப்பு தாபிப்பு**<br><br>மடுவீதி அபயபூமி அறிவித்தல் பதாகை<br><br>சுண்டிக்குளம் அபயபூமி அறிவித்தல் பதாகை | **0.5** | **0.07** | • வன்காலை அபயபூமியின் முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப் படுகின்றது. |
| 2. | **சுற்றாடல் சுற்றுலா பணிகளின் அபிவிருத்தி**<br><br>மின்னேரியா தேசிய வனப்பூங்கா<br> | **2.5** | **2.22** | • யால தேசிய வனப்பூங்காவில் புதிய நிர்வாக கட்டிடத் தொகுதிக்கான நிர்மாணிப்பு தொடர்பாக அடிக்கல் நடப்பட்டது.<br>• கல்ஓயா தேசிய பூங்காவின் நில்கல வனசீவராசிகள் சுற்றுலா விடுதியின் நிர்மாணிப்புக்கள் முடிவுறுத்தப் பட்டுள்ளன.<br>• வில்பத்து தேசிய பூங்காவின் மெனிக்வில சுற்றுலா விடுதி சுற்றுலா பயணிகளுக்காக திறந்து வைக்கப்பட்டது.<br>• கெல்வேஸ்லேண்ட் தேசிய பூங்காவில் கன்டேனர் முகாம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| 3. | மக்கள் ஈடுபாடு நிகழ்ச்சித்திட்டங்கள்<br><br>சமுதாய அடிப்டையிலான அமைப்புக்களின் மூலம் மரநடுகை நிகழ்.திட்டங்கள் | **3.00** | **2.90** | • மின்னேரியா, கவுடுல்ல, சமனல அடவிய, புத்தல மற்றும் கெல்வேஸ்லேண்ட் தேசிய பூங்காவினை அண்டிய மக்களின் ஒத்துழைப்புடன் 13 சிரமதான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | <br>கைவினை உற்பத்திகளின் கண்காட்சி | | | • வனசீவராசிகள் காப்பிடங்களை அண்டிய சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் மேம்பாட்டு மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக வனசீவராசிகள் பாதுகாப்பு தொடர்பாக 10 விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.<br>• புந்தல தேசிய பூங்கா, ரிட்டிகல உயர் காப்பிடத்தை அண்டிய மக்களுக்கு 05 சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் (தேன் கட்டுப்பாடு மற்றும் கைவினைப் பயிற்சி)<br>• மின்னேரியா தேசிய பூங்கா மற்றும் சமனல அடவி ஆகியனவற்றை சூழ தேசிக்காய் செடி / கித்துள், கொரக்கா செடிகளை நட்டி 7 கி.மீ. தூரத்திற்கு உயிரியல் வேலி நீடிக்கப்பட்டது. |
| 4 | **அச்சுறுத்தலுக்காளான உயிரினங்களைப் பாதுகாத்தல்**<br><br> | **1.0** | **0.95** | • காட்டு யானைகளின் இடப்பெயர்வு வகை குறித்த தரவுகளை திரட்டுவதற்காக காட்டு யானைகளுக்கு 07 GPS Collar கள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>• அநாதையான மற்றும் பல்வேறு விபத்துக்காளால் பாதிக்கப்பட்ட கடலாமைகள் மற்றும் ஆமைகள் தொடர்பாக 02 நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன.<br>• அநாதையான மற்றும் பல்வேறு விபத்துக்காளால் பாதிக்கப்பட்ட கால் நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், அவற்றை இயற்கைச் சுற்றாடலுக்கு விடுவிக்கும்வரை தடுத்து வைத்திருத்தல் தொடர்பாக 06 விலங்குக் கூடுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |
| 5. | தகவல்மற்றும் தொழிநுட்ப முறைமை மேம்படுத்தல்<br><br>வானொலி தொடர்பாடல் வலையமைப்பின் பேணல் | **10.00** | **9.20** | • தலைமை அலுவலகம் மற்றும் கள அலுவலகங்களின் வானொலி தொடர்பாடல் முறைமையினதும் கணினிமயப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் முறைமையினதும் பேணல் பணிகள் தொடர்ந்தேச்சை யாக இடம்பெறுகின்றன.<br>• WILD LANKA ஆராய்ச்சி சஞ்சிகையின் முதலாவது மற்றும் இரண்டாவது இதழ்கள் பிரசுரிக்கப் பட்டுள்ளதுடன், அது தொடர்பான ஆராய்ச்சி மாநாடு ஒன்றும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.<br>• வோக்கி டோக்கி பொறிகளுக்கு 40 பற்றரிகள் கொள்வனவு செய்யப்பட்டன. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| |  | | | • தலைமை அலுவலகம் மற்றும் வலய அலுவலகங்களுக்கு கணனி வலையமைப்பு மேம்படுத்தல் தொடர்பாக 54 கணனிகளும், 36 அச்சுப்பொறிகளும், 54 UPS களும் கொள்வனவு செய்யப்பட்டு வனசீவராசிகள் வலயங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. |
| 6. | நீர்த்தேக்கங்கள் மற்றும்ம் நீர்க்குழிகள் மறுசீரமைப்பு<br><br>வில்பத்து தே. பூங்கா வாவி மறுசீரமைப்பு | **0.7** | **0.68** | • ஹொரகொல்ல தேசிய பூங்காவில் உள்ள வாவியின் மறுசீரமைப்பு பணிகள் மேற்காள்ளப்படுகின்றன. |
| 7 | **கட்டிடங்களின் திருத்த வேலைகள்**<br><br>வவுனியா வனசீவராசிகள் நிர்வாக கட்டிட நிர்மாணம் | **30.8** | **30.35** | • காப்பிடப் பிரதேசங்களில் அலுவலர்களது நிர்வாகப் பணிகளை இலகுபடுத்தும் பொருட்டு 14 நிர்வாக கட்டிடங்கள், 04 உத்தியோகபூர்வ விடுதிகள், 06 மின்சார இணைப்புக்கள், 03 கேட்கள் மற்றும் 03 பாதுகாப்பு வேலிகள் ஆகியன மறுசீரமைக்கப்பட்டுள்ளன.<br>• 02 புதிய கட்டிடங்களும், வில்பத்து மற்றும் லுணுகம்வெஹர தேசிய பூங்காக்களில் 02 உத்தியோகபூர்வ விடுதிகளும் நிர்மாணிக்கப் பட்டுள்ளன. |
| 8 | தளபாட மற்றும் அலுவலக உபகரண கொள்வனவு<br><br>வனசீவராசிகள் சுற்றுலா விடுதிக்கென கொள்வனவு செய்த தளபாடங்கள் | **47.0** | **46.33** | • வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், வலய அலுவலகங்கள் ஆகியனவற்றுக்கு அலுவலக உபகரணங்களும், வனசீவராசிகள் சுற்றுலா பங்களா தொடர்பாக தளபாடங்கள் கொள்வு செய்யப்பட்டுள்ளன. (இணைப்பு 1) |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 9 | பொறியும் பொறித் தொகுதியும் கொள்வனவு செய்தல் | 4.0 | 3.02 | • வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், வலய அலுவலகங்கள் ஆகியனவற்றுக்கு 01 நிதி கணக் கீட்டுப் பொறி, 02 ஸ்டெப்லர்கள், 03 வளிச்சீராக்கி முறைமைகள், 04 படகுகள் மற்றும் 03 ஜெனரேட் டர்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 10 | வாகனங்களின் திருத்த வேலைகள் | 8.0 | 8.0 | • திணைக்களம் மற்றும் கள அலுவலகங்களுக்கு 40 சிங்கல் கெப் வண்டிகள் மற்றும் 28 டபிள் கெப் வண்டிகள் தொடர்பாக (Canopy) பொருத்தப்பட்டன. |
| 11 | **பயிற்சி மற்றும் ஆய்வு**<br><br>**வனசீவராசிகள் அலுவலர்கள் ஆய்வுகளில் ஈடுபடல்** | 1.35 | 1.35 | • 04 ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டு உள்ளதுடன், அதன் போது குழு அங்கத்தவர்களினால் சிபார்சு செய்த வெளி ஆராய்ச்சி யாளர்களின் ஆய்வுச் செயற்திட்ட ங்கள் தொடர்பாக அங்கீகாரம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.<br>• திணைக்களத் தலைவர்களின் வருடாந்த ஆய்வு மாநாடு நடாத் தப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2015 ஆண்டில் 14 திணைக்கள ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.<br>• பறவைகளுக்கு வளையமிடும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 03 அமர்வுகள் புத்தள தேசிய வனப்பூங்காவில் நடாத்தப்பட்டது. |
| 12 | **பாதுகாப்புக் கற்கை மற்றும் விவரண, பயிற்சிகள்**<br><br>மக்களுக்கு விழிப்பூட்டல் | 7.0 | 6.95 | • உலக சுற்றாடல் தினம், உயிர் பல்வகைமை தினம், ஈரலிப்பு நிலங்கள் தினம் முதலிய விழா தொடர்பான 05 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 04 வனசீவ ராசி வலயங்கள் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்பட்டுள்ளன.<br>• பொசான் மற்றும் எசல வைப வங்கள் தொடர்பாக 04 விழிப் பூட்டல் நிகழ்ச்சி திட்டங்கள் 03 வனசீரவராசி வலயங்கள் உள்ள டங்கும் வகையில் நடாத்தப் பட்டுள்ளன. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| | **பாதுகாப்புக் கற்கை மற்றும் விவரண பயிற்சி**<br> | | | • பாடசாலை மாணவர்களுக்கான 38 விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங் களும், அரசாங்க அலுவலர்கள் உள்ளடங்களாக பொதுமக்களுக்கான 38 நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன<br>• எல்லா வனசீவராசி வலயங்களை யும் உள்ளடக்கியவாறு 11 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப் பட்டன.<br>• பாதுகாப்பான தாவரங்களை இனங் காணல் (27 அலுவலர்கள்), தேநீர் தயாரித்தல் (10 சிற்றூழியர்கள்), முதலைகளைப் பிடித்தல் மற்றும் விடுவித்தல் (40 அலுவலர்கள்) பங்களா பொறுப்பாளர் கள் (25 அலுவலர்கள்) மற்றும் புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட சாரதிகள் (70 சாரதிகள்) தொடர்பாக 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப் பட்டுள்ளதுடன், புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட 35 முகாமைத்துவ உதவியாளர்கள் தொடர்பாக ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.<br>• காப்பிட வலயங்கள் தொடர்பான 02 துண்டுப் பிரசுரங்கள் (10,000 பிரதிகள்) மற்றும் 02 போஸ்டர்கள் (10,000 பிரதிகள்) சிங்கள, ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளன.<br>• 'வனாந்தரே கதந்தரே' எனும் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் வானொலிக் கூட்டுத்தாபனம் மூலம் ஒலிபரப் பப்பட்டது. வனசீவராசி வளங்கள் அமைச்சினால் வெளியிடப்படும் "வனதிவி செரிய' என்ற இணைப் பிதழின் 10 இதழ்கள் மற்றும் தமிழ் இணைப்பிதழின் 01 இதழ் என்பன அச்சிட்டு வெளியிடப்பட்டன.<br>• வனதிவி இணைப்பிதழின் 2500 பிரதிகள் அச்சிடப்பட்டன.<br>• 2016 ஆண்டிற்கான 3000 நாளேடுகள் மற்றும் 2016 நாட்காட்டிகள் 35000 அச்சிடப்பட்டுள்ளன.<br>• வனசீவராசிகள் வலய அலுவலகங் களுக்கு விநியோகிப்பதற்காக 10 கட்புல உபகரண சோடிகள் கொள்வனவு செய்யப்பட்டன. |

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூ.மில்.) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 13 | **பாதுகாப்பையும் சட்டத்தையும் நிலைநாட்டுதல்**  வனசீவராசிகள் அலுவலர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பம்  | **8.6** | **8.56** | • 6,000 துப்பாக்கி ரவைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. <br> • GPS மற்றும் செய்மதிப் புகைப்படப் பாவனை ஆகிய வற்றின் மூலம் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து திணைக்களத்தின் 25 அலுவலர் களுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப் பட்டன. <br> • வனபூமி இடப்பெயர்வு உபாயம் தொடர்பான 01 நிகழ்ச்சித்திட்டம் 17 அலுவலர்களின் பங்குபற்ற லுடன் நடைபெற்றது. <br> • நீதிமன்ற அலுவலக நடைமுறை தொடர்பான விழிப்புணர்வூட்டல் தொடர்பாக 30 அலுவலர்கள் தொடர்பாக நடாத்தப்பட்டது. |
| 14. | **தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும்பயிற்சி நிலையங்களைப் பேணல்**  **தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம்–கிரித்தல**  | **8.6** | **8.26** | • புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட 200 வனசீவராசிகள் அலுவலர்கள் தொடர்பாக 06 மாதகால ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கிரித்தலை தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அவ் அலுவலர்களின் திறன்விருத்தி மேம்பாடு தொடர்பாக நடாத்தப் படுகின்றன. <br> . |

## வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம்

வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதியை வனசீவராசிகள் பாதுகாப்பு விடயங்களுக்குப் பயன்படுத்துவது இந்த நிதியத்தின் குறிக்கோளாகும். சுற்றுலா விடயங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் ஒரு பகுதி, வனசீவராசிகள் குற்றங்களுக்கு எதிராக அறவிடப்படும் தண்டப் பணம், திணைக்களத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் நன்கொடைகள் என்பன இந் நிதியத்தில் அடங்குகின்றன.

## வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் முன்னேற்றம் - 2015.12.31

| நிதி மூலம் | மதிப்பீடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) | (%) |
|---|---|---|---|
| வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் | 1245.4 | 600.42 | 48 |

### சுற்றுலா சேவைகளினூடாக பெற்ற வருமானம் 2015.12.31இல்

| மாதம் | வருமானம் (ரூ.மில்.) |
|---|---|
| சனவரி | 127.3 |
| பெப்ரவரி | 166.3 |
| மார்ச் | 132.7 |
| ஏப்ரல் | 104.3 |
| மே | 60.0 |
| ஜூன் | 67.9 |
| ஜூலை | 181.4 |
| ஆகஸ்ட் | 231.3 |
| செப்தெம்பர் | 125.6 |
| ஒக்ரோபர் | 109.2 |
| நவம்பர் | 125.3 |
| டிசெம்பர் | 153.0 |
| **மொத்தம்** | **1.585** |

* மேற்படி வருமானத்தில் தேசிய பூங்காக்களின் வருமானங்களுக்கு மேலதிகமாக ஏனைய வருமானங் களும் சேர்க்கப்பட்டுள்ளது (சுற்றுலா பங்களா ஒதுக்குதல்,சேவைக்கட்டணம் ஆகியன)

### தேசிய பூங்காக்களுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் 2015.12.31 இல்

| தேசிய பூங்கா | உள்நாடு | வெளிநாடு | வருமானம் (ரூ.மில்.) |
|---|---|---|---|
| யால | 308,790 | 236,217 | 644.6 |
| ஹோட்டதென்ன | 228,858 | 87,962 | 308.3 |
| உடவளவை | 113,424 | 89'116 | 249.6 |
| வஸ்கமுவ | 20,338 | 1,069 | 6.5 |
| மின்னேரிய | 65,203 | 61,683 | 165.4 |
| புந்தள | 8,663 | 8,619 | 17.0 |
| ஹொரகொல்ல | 5,019 | 13 | 0.23 |
| கவுதுல்ல | 15,058 | 15,959 | 31.3 |
| லுணுகம்வெஹர | 6,808 | 3,539 | 9.02 |
| கல்ஒயா | 5,059 | 1,384 | 5.0 |
| குமண | 21,996 | 4,920 | 14.6 |
| அங்கம்மெடில்ல | 2,041 | 6 | 0.44 |
| கல்வேஸ்லேண்ட் | 2,047 | 49 | 0.16 |
| வில்பத்து | 49,068 | 19,505 | 65.9 |
| மாதுருஒயா | 863 | 142 | 0.73 |
| லாஹுகல | 234 | 10 | 0.057 |
| புறா தீவு | 58,774 | 19,069 | 38.4 |
| ஹிக்கடுவை | 25,041 | 4,480 | 0.23 |
| உடவளவ. யானை சரணாலயம் | 144,825 | 33,320 | 20.6 |
| வெலிபர அபயபூமி | 13,269 | 4,779 | 5.74 |
| **மொத்தம்** | **1,095,378** | **591,841** | **1583.80** |

## முழுமொத்த நிதி முன்னேற்றம் - 2015.12.31 திகதியளவில்

| நிதி மூலம் | மதிப்பீடு (ரூ.மில்.) | செலவு (ரூ.மில்.) | நிதி மேம்பாடு % |
|---|---|---|---|
| **மூலதனச் செலவு** | 658.0 | 587.08 | 89 |
| **மீண்டெழும் செலவு** | 973.62 | 956.16 | 98 |
| **மொத்தம்** | **1631.62** | **1543.24** | **94.58** |

## செலவினப் பொழிப்பு

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு (ரூ. மில்.) | நிதி மேம்பாடு (ரூ. மில்.) |
|---|---|---|---|
| 1 | காப்பிட பிரதேச வலையமைப்பு தாபிப்பு | 0.5 | 0.07 |
| 2 | சுற்றாடல் சுற்றுலாத்துறை அபிவிருத்தி | 2.5 | 2.22 |
| 3 | மக்கள் ஈடுபாட்டுப் பணிகளின் அபிவிருத்தி | 3.0 | 2.90 |
| 4 | அச்சுறுத்தலுக்காளான அரியவகை விலங்கினப் பாதுகாப்பு | 1.0 | 0.95 |
| 5 | தகவல் தொடர்பாடல் முறைமை மேம்பாடு | 10.0 | 9.20 |
| 6 | கட்டிட நிர்மாணிப்பு மற்றும் மறுசீரமைப்பு | 30.8 | 30.35 |
| 7 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்களின் கொள்வனவு | 47.0 | 46.33 |
| 8 | இயந்திரப்பொறித் தொகுதி கொள்வனவு | 4.0 | 3.02 |
| 9 | வாகனங்களின் திருத்த வேலைகள் | 8.0 | 8.0 |
| 10 | காப்பிட பிரதேசங்களின் நீர்மூலங்களை மேம்படுத்தல் | 0.7 | 0.68 |
| 11 | காப்பிட பிரதேசங்களில் எல்லைகளை அடையாளமிடல் | 32.0 | 21.23 |
| 12 | பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அலுவல்கள் | 1.35 | 1.35 |
| 13 | பாதுகாப்பு கற்கை மற்றும் விவரணம் | 7.0 | 6.95 |
| 14 | பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் | 8.6 | 8.56 |
| 15 | தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கேந்திர நிலைய பேணல் | 8.6 | 8.26 |
| 16 | காப்பிட பிரதேச வீதி முறைமைகளை மறுசீரமைத்தலும், அபிவிருத்தி செய்தலும் | 31.5 | 15.91 |
| 17 | காப்பிட பிரதேச வதிவிட வளப்படுத்தல் | 161.5 | 145.28 |
| 18 | மின்வேலி நிர்மாணிப்பு | 300.0 | 275.82 |
| மொத்தம் | | **658.0** | **587.08** |

# 2015 ஆண்டின் வனவிலங்குப் பாதுகாப்பு நிதியப் பொழிப்பு

## வனவிலங்குப் பாதுகாப்பு நிதியத்தின் நோக்கம் மற்றும் நிர்வாகம்

**வனவிலங்குப் பாதுகாப்பு நிதியம் விலங்குகளைப் பாதுகாத்தல், காப்புறுதி செய்தல், அதுசார்ந்த அனைத்து விடயங்களை மேம்படுத்தலும் விருத்தி செய்தலும்தொடர்பாக தாபிக்கப்பட்டதாகும்.**

| விபரம் | செலவு (ரூ..000) |
|---|---|
| **விலங்குகளுக்கான நலனோம்பல்** | ***12,493*** |
| மலடாகக்கூடிய அச்சுறுத்தலுள்ள அரியவகை உயிரின பாதுகாப்பு | 4,348 |
| யானைகளை விரட்டியடித்தல் | 7,343 |
| இறந்த காட்டு யானைகளை அப்புறப்படுத்தல்/ புதைத்தல்/எரியூட்டல் | 802 |
| **அலுவலர்களுக்கான நலனோம்பல்** | ***146,117*** |
| அலுவலர்களது உயிர், உடற் பாதிப்புக்களுக்கான நட்டஈடு | 708 |
| சேவைக் கட்டணங்கள் | 145,409 |
| **பேணல் செலவினம்** | ***46,768*** |
| வாகனங்களின் திருத்த வேலைகள் | 19,542 |
| பங்களாக்களின் திரைச்சீலை, விரிப்புக்கள், துவாய் சுத்தம் செய்தல் | 733 |
| பொறித் தொகுதி, மின்னுபகரணம், கட்டிட பராமரிப்புச் செலவினம் | 16,143 |
| நானாவித செலவினம் | 10,350 |
| **சேவைகள்** | ***9,780*** |
| மின்சாரம் மற்றும் நீர் | 4,224 |
| துப்பாக்கி அனுமதிப்பத்திர கொடுப்பனவு | 170 |
| வானொலி செய்திகளுக்கான கொடுப்பனவுகள் | 3,364 |
| மக்களுக்கு விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்களுக்கானகொடுப்பனவு | 2,022 |
| **படிகள்** | ***108,949*** |
| தன்னார்வ வழிகாட்டிப் படி | 48,024 |
| உள்ளபடியான ஊழியர் படி | 5,368 |
| ம படி ( நீதிமன்ற தண்டப்பண பெறுவனவுகளில் இருந்து) | 9,320 |
| ஊக்குவிப்புப் படி | 46,237 |
| **பிரயாணச் செலவினம்** | ***20,699*** |
| உள்ளூர் | 20,699 |
| **வழங்கல்கள்** | ***150,798*** |
| காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | 956 |
| எரிபொருள் | 27,453 |
| யானை வெடி கொள்வனவு | 76,066 |
| விலங்குகளுக்கான உணவுச் செலவினம் | 35,502 |
| செயற்பாட்டுப் பொருட்களும் உதிரிப்பாகங்களும் (வைத்திய) | 6,388 |
| சுற்றுலா விடுதிகளுக்குத் தேவையான பொருட்கள் | 4,433 |

| விபரம் | செலவு (ரூ..000) |
|---|---|
| **பிரயாணச் செலவினம்** | ***20,699*** |
| **மனித வள அபிவிருத்தி** | ***13,397*** |
| வெளிநாட்டுப் பயிற்சி | 13,397 |
| **மூலதனம்** | ***91,467*** |
| சுற்றுலாப் பயணிகளின் மற்றும் வனசீவராசிகள் பூங்காக்களின் வசதிகளை மேம்படுத்தல் | 91,467 |
| **மொத்தம்** | **600,469** |

NATIONAL
ZOO
SRI LANKA

# தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்

# தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்

## அறிமுகம்

வன விலங்குகளை பிடித்து வெளிநாட்டு மிருகக் காட்சிசாலைகளுக்கு அனுப்பும் வரை தரித்து வைத்திருப்பதற்கான தனியார் வனவிலங்கு சேகரிப்பிடமாக 1920 ஆண்டிற்கு முன்னர் இம் மிருகக்காட்சிசாலை தாபிக்கப்பட்டது.




தெஹிவல பிரதேசத்தில் ஏறத்தாழ 11 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பில் ஜெர்மனி நாட்டவரான திரு. ஜோன் ஹாகென்பர்க் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தெஹிவல மிருகக்காட்சிசாலை 1936 ஆம் ஆண்டு 01 ஆந் திகதி அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

அதன் பின்னர் இம் மிருகக்காட்சிசாலை 1946 ஆம் அண்டு சுயாதீன அரசாங்க திணைக்களமான மாற்றம் பெற்றது. மிருகக்காட்சிசாலையின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவப் பணிகள் 1982 ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது இத் திணைக்களத்தின் கீழ் தெஹிவல மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் பின்னவல மிருகக்காட்சிசாலைகளின் இலங்கை வலயம் எனும் மூன்று செயற்பாட்டுப் பிரிவுகளது காட்சிப்படுத்தல் நடவடிக்கைகள் ஆகியன முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் ரிதியவல சபாரி பூங்காவின் நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## தொலைநோக்கு

"உலகின் மிகச் சிறந்த மிருகக்காட்சிசாலையைப் பேணுகின்ற நிறுவனமாகத் திகழ்தல்"

## பணிநோக்கு

"நவீன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவின் கீழ், கண்கவர் சிற்பமுறைகள் மற்றும் தேர்ச்சிமுறைமைகளினூடாகவும் அங்கீகரிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் அதிகூடிய பாதுகாப்புடனான இருப்பிடங்களை வழங்கி, பல்வகைமைத் தன்மையுடன் கூடிய ஆரோக்கியமான விலங்கினங்களை கூட்டாக காட்சிப்படுத்தல்"

## பிரதான பணிகள்

- இயற்கைச் சூழலை அண்டிவாழும் பல்வகைத்தன்மையுடன் கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விலங்குகளை கூட்டாகப் பேணிச் செல்லல்.

- தரித்து வைத்துள்ள விலங்குகளின் இருப்பு, நலனோம்பல் மற்றும் இயற்கையான நடத்தை ஆகிய அம்சங்களை உறுதிப்படுத்தல்

- அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மற்றும் அருகிவரும் இந்நாட்டின் தனித்துவமான விலங்கினங்களின்பால் கூடிய கவனம் செலுத்தி விலங்குகளின் வெளியக பராமரிப்பை உறுதிப்படுத்தல்.

- அருகிவரும் விலங்குகினங்களைப் பாதுகாத்தல்

- பாதுகாப்பான இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- விலங்குகள் மற்றும் ஏனைய மிருகக்காட்சிசாலை விடயங்கள் தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்காக ஆராய்ச்சிகளை நடாத்தல்

- விலங்குகளின் வாழ்வியல் நடைமுறைக்கு ஆகக்குறைந்த அளவிலேனும் தடைகள் ஏற்படா வண்ணம் அறிவை விருத்தி செய்தல் மற்றும் பொழுதுபோக்கிற்காக விலங்குகளை காட்சிப்படுத்தல்.

- பாடசாலை மாணவர்களின் முறைசாரா கல்வி நடவடிக்கைகளுக்கு துணைபுரியும் நோக்குடன் தொலைக் கல்வி நிகழச்சித்திட்டங்களை நடாத்தல்.

- சுற்றாடல் ரீதியிலான புலம்பெயருதலை ஊக்குவித்தல் மற்றும் காட்சிப்படுத்தல் ஆகியன தொடர்பான நவீன எண்ணக்கருக்களின் ஊடாக சுற்றுலாத் துறையின் தேவைகளை பூர்த்திசெய்தல்.

- நாட்டில் மிருகக்காட்சிசாலைகளை தாபித்தல் மற்றும் மீன்காட்சியகத்தின் (மின்மெதுர) நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகள், திட்டமிடல் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை தயாரித்தல்.

- ஊழியர்கள் மற்றும் பார்வையாளர்கள் தொடர்பாக பாதுகாப்பானதும் திருப்திகரமானதுமான சூழலை ஏற்படுத்தல்.

- சர்வதேச அமைப்புக்கள், மிருகக்காட்சிசாலை வலையமைப்புகள் என்பவற்றில் முனைப்பாக பங்களித்தல், தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் விலங்கினப் பரிமாற்ற நிகழச்சித்திட்டங்களில் பங்களிப்புச்செய்தல்.

- மிருகக்காட்சிசாலைகள் தொடர்பாக அபிமானத்துடன் செயற்படக்கூடிய விசேட அமைப்புக்கள், உள்நாட்டு வெளிநாட்டு தன்னார்வ தொண்டாளர்கள், வெளித்தரப்பினர், மாணவர்கள் மற்றும் அது தொடர்பாக தன்னார்வத்துடன் பங்களிப்பு நல்குவதற்கு காத்திருக்கின்ற நலன்விரும்பிகள் அனைவருக்கும் தைரியமூட்டல்

- உணவு வழங்கும் விவசாயப் பண்ணைகள், கற்புல செவிப்புல பிரிவுகள், கேட்போர்கூடங்கள், நவீன ஆய்வுகூடங்கள், விலங்குகளின் மருத்துவமனைகள், வெவ்வேறாக அமைக்கப்பட்டுள்ள சேவைப் பிரிவுகள், நூதனசாலைகள் மற்றும் நூலகங்கள் போன்ற உபகாரச் சேவைகளை அபிவிருத்தி செய்தல்.

- விலங்கின பராமரிப்புகளுக்கு ஏற்றவாறான சுற்றாடல் பாதுகாப்பு அளவீடுகளுக்கமைய செயற்படுதல்

- தொடர்ச்சியான பேணல் மற்றும் தரமுயர்த்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நெறிப்படுத்தல்.

- பொது மக்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றுடன் அன்னியோன்னிய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

**பிரதான குறிக்கோள்கள்**

- விலங்குகளின் முகாமைத்துவம் மற்றும் நலனோம்பல்
- பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கம்
- ஆராய்ச்சி
- கண்காட்சிகள் மற்றும் கல்வி நிகழ்ச்சிகள்
- இரசனை மற்றும் பொழுதுபோக்கு

# செயற்பாட்டு அலகுகள்

- தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை

தெஹிவளை பிரதேசத்தில் ஏறத்தாழ 11 ஏக்கர் அளவிலான நிலப்பகுதியில் ஜெர்மனி நாட்டு பிரசையான திரு. ஜோன்ஹாகென்பர்க் அவர்களால் வனவிலங்குகளின் கூட்டாக 1920 தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தெஹிவளை மிருகக்காட்சிசாலை 1936 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் சுவிகரிக்கப்பட்டது. தற்போது 23 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்துபட்டுக் காட்சியளிக்கின்றது.

**தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் வசமுள்ள மொத்த விலங்கினங்கள் 2015.12.31 ஆந் திகதியளவில்**

| விலங்கின வகை | விசேட/குடும்பம் | விலங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாலூட்டிகள் | 69 | 378 |
| பறவைகள் | 74 | 573 |
| ஊர்வன | 32 | 207 |
| மீன் இனங்கள் | 74 | 3560 |
| **மொத்தம்** | **249** | **4718** |

**2015 தெஹிவளை மிருகக்காட்சியகத்தில் பிறந்த விலங்கினங்கள் தொடர்பான விபரங்கள்**

**2015 ஆண்டில் தெஹிவளை தேசிய மிருகக்காட்சியகத்தினுள் பிறந்த 99 விலங்குகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| விலங்கின வகை | | பிறப்பு -தொக |
|---|---|---|
| 1 | ஆபிரிக்கா சிங்கம் | 04 |
| 2 | ஒட்டகச் சிவிங்கி | 01 |
| 3 | நைல் ஹிப்பொட்டேமஸ் | 01 |
| 4 | குரு ஹிப்பொட்டேமஸ் | 01 |
| 5 | பஜிரிகார் | 12 |
| 6 | நீல மஞ்சள் மெக்கோ | 08 |
| 7 | சீனபெசன்ட் | 18 |
| 8 | நரி | 02 |
| 9 | குவானகோ | 01 |
| 10 | கினிபிக் | 10 |
| 11 | கிரேட்டகுடு | 01 |
| 12 | கொகட்டுவா | 04 |
| 13 | மீமின்னா | 03 |
| 14 | ரேன்போ லொறிகிட்ஸ் | 05 |
| 15 | வங்காள வியாகிரயா | 01 |

| விலங்கின வகை | | பிறப்பு -தொக |
|---|---|---|
| 16 | செமிட்ஹொான் ஒரெக்ஸ் மாடு | 01 |
| 17 | புள்ளி மான் | 12 |
| 18 | மரை | 01 |
| 19 | சிலு குரங்கு | 02 |
| 20 | மர அணில் | 01 |
| 21 | ஹல்மேரா கிளி | 02 |
| 22 | முள்ளம்பன்றி | 02 |
| 23 | ஒரங் உட்டங் | 01 |
| 24 | பிராமண பருந்து | 02 |
| 25 | சிவப்பு தேதுடுவா | 03 |
| மொத்தம் | | **99** |
| மேற்படி விலங்கினங்களுக்கு மேலதிகமாக ஊர்வனவற்றினதும், மீனினங்களினதும் பிறப்புக்கள் 2105 ஆண்டில் நிகழவில்லை.. | | |

## விலங்கின நலனோம்பல்

மிருகக்காட்சியகத்திலுள்ள விலங்குகளின் நலனோம்பல் பணிகள் தொடர்பாக கால்நடை வைத்தியரினால் 2015 ஆண்டில் 652 இரசாயனகூட பரீலனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சத்திர சிகிச்சை உட்பட 2072 சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, நீதிமன்றங்களில் இருந்து முன்னளிக்கப்படுகின்ற வழக்குப் பொருட்களை இனங்காணல் மற்றும் 59 அறிக்கைகள் வழங்கியமை, நீதிமன்ற அழைப்பாணைகளின் பிரகாரம் வழக்குப் பொருட்கள் தொடர்பாக 01 சாட்சியை முன்வைத்தமை மற்றும் பெரஹரா சம்பந்தமாக 23 சுயவிழப்பு குழுக்களை கலந்து கொள்ளச் செய்தல் ஆகிய விலங்குகளின் நலனோம்பல் தொடர்பாக பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன.

## கற்கை

2015 ஆண்டில் தெஹிவளை மிருகக்காட்சிசாலையின் கற்கைப் பிரிவினால் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக 201 பாடசாலை செயற்திட்டங்கள், 02 பிரயோக அமர்வுகள் ஆகியன தொடர்பான பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர்களுக்காக 16 பிரயோக அமர்வுகள், 02 தாபனப் பயிற்சிகள், கற்கைகளுக்கான 05 வழங்கல்கள், ஆய்வுகள் தொடர்கள் 02 .வழங்கல்கள், 02 செயற்திட்டங்கள், 01 கணிப்பீடு, 01 ஆய்வு சேவை வழங்கல் ஆகியன தொடர்பாக பங்களிப்புக்கள் வழங்கப்பட்டன.

அவ்வாறே, ஊர்வன தொடர்பான 03 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், 10 கற்கைசார் கண்காட்சிகள், 01 மேம்பாட்டுக் கண்காட்சி ஆகியன தொடர்பாக கலந்து கொண்டு கல்வி சார்ந்த பெறுமானமிகு அரிய தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

திணைக்களத்தின் கால்நடை வைத்தியப் பிரிவினால் கால்நடை வைத்திய மாணவர்கள் தொடர்பாக 09 கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள், 03 கால்நடை வைத்திய மாணவர்கள் தொடர்பாக தொழில்சார் பயிற்சிகள், 05 தன்னார்வ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 2015 ஆண்டில் கல்விசார் பணிகள் தொடர்பாக தமது பங்களிப்பினை வழங்கியுள்ளது.

தன்னார்வ அலுவலர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தினால் தன்னார்வ அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. சாதாரண கட்டணம் மற்றும் பயிற்சியின் பின்னர் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும் வகையில் இந் நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2015 ஆண்டில் தெஹிவளை தேசிய மிருகக்காட்சியகத்தில் 02 வெளிநாட்டவர்கள் மற்றும் 05 உள்நாட்டுப் பயிலுநர்கள் தன்னார்வ அலுவலர்களது நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டனர்.

## ஏனைய விசேட அம்சங்கள்

மிருகக்காட்சியகத்தில் யானைகள், கொம்பன் யானைகள் மற்றும் அரிய விலங்குகள் தொடர்பாக ஏப்ரல் 15 ஆந் திகதி தலையில் எண்ணெய் தோய்க்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தினால் ஏப்ரல் 26 ஆந் திகதி தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தினால் வெசாக் போயா தினத்திற்குப் பிந்திய தினம் மிருகக்காட்சியகத்திற்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு ‘பெலிமல் தன்சல’ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உலக சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினத்தை தொனிப்பொருளாக கொண்டு ஒக்ரோபர் 01 ஆந் திகதி மற்றும் 03 ஆந் திகதி மிருகக்காட்சியகத்திற்கு வருகை தரும் 12 வயதுக்குக் குறைந்த அனைத்து சிறார்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இலவசமாக நுழைவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டன.

உலக விலங்கினத் தினம் தொடர்பாக ஒக்ரோபர் 04 ஆந் திகதி பாடசாலை மாணவர்களுக்கு செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சர்வதேச உயிர் பல்வகைமை தினம் மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளான அரிய உயிரினங்கள் தினம் தொடர்பாக மே மாதம் 18–22 வரை மேல் மாகாண பாடசாலை மாணவர்கள் தொடர்பாக பல வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், 800 பாடசாலை மாணவர்கள் அவற்றில் கலந்து கொண்டனர்.

- **பின்னவளை யானைகள் சரணாலயம்**

பின்னவளை யானைகளின் சரணாலயம் 1975 ஆம் ஆண்டு இரம்புக்கனை பின்னவளையில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அநாதரவாக விடப்பட்டிருந்த 05 யானைகளை பராமரிப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1982 ஆம் ஆண்டில் பின்னவளை யானைகள் சரணாலயம் தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**2015 ஆண்டிறுதியில் 40 வயதை அடைந்துள்ள யானைகள் சரணாலயத்தில் 93 யானைகளுக்கு (ஆண்–41, பெண்–52) நிழல் கொடுக்கின்றன. 1984 ஆண்டில் யானைகள் சரணாலயத்தின் முதலாது யானையான சுகுமலி பிறந்ததுடன், 2015 ஆண்டில் ஒரு பிறப்புடன் இது வரையில் 70 பிறப்புக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.**

## கல்வி

பின்னவளை யானைகள் சரணாலயத்தினால் 2015 ஆண்டில் கல்விசார் முக்கிய பணிகள் தொடர்பாகவும் பங்களிப்பு வழங்கப்பட்டது.

2015 ஆண்டில் கல்விசார் விழிப்புணர்வுகளைப் பெற்றுக் கொண்டவர்கள்;

- கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள் 2497
- கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் - 77
- குழுச் செயற்திட்டங்கள் தொடர்பாக வந்த பல்கலைக்கழக மாணவர்கள்- 36
- தனிப்பட்ட செயற்திட்டங்களுக்கு வந்த பாடசாலை மாணவர்கள் - 30
- தகவல் அறியும் பொருட்டு வருகை தந்த வெளிநாட்டினர் - 15

மேற்படி விழிப்பூட்டல்களுக்கு மேலதிகமாக 2015 ஆண்டில் கல்விசார் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

2015 ஆண்டில் பின்னவளை யானைகள் சரணாலயத்தில் 17 வெளிநாட்டினர் மற்றும் 01 உள்நாட்டு பயிலுநர் தன்னார்வ தொண்டர் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டனர்.

## விசேட பண்புகள்

ஜூலை 5 ஆந் திகதிய உலக சுற்றாடல் தினத்தை அடிப்படையாக கொண்டு யானைகள் சரணாலய வளவுக்குள் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சுற்றாடலை முதன்மையாகக் கொண்ட நடைப்பயணம், மாஓயாவை அண்டிய பகுதியை துப்புரவு செய்தல், திறன்களை வெளிக்காட்டல், சுய கருத்துக்களை முன்வைத்தல், புத்திஜீவிகளின் விரிவுரைகள் ஆகிய பல்வேறு அம்சங்கள் இணைந்து மிகச் சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் இந் நிகழ்ச்சித்திட்டம் மிக பயனுள்ள வகையில் அச்செயற்திட்டம் திகழ்ந்தது.

உலக சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினத்தை தொனிப்பொருளாக கொண்டு ஒக்ரோபர் 01 ஆந் திகதி யானைகள் சரணாலயத்துக்கு வருகை தரும் மற்றும் 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள், பாடசாலை மாணவர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இலவசமாக நுழைவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டன. அத்துடன் அறிவுக்களஞ்சிய போட்டி மற்றும் பார்வையாளர்கள் தொடர்பாக பொழுது போக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அருகிவரும் விலங்கினமான இனங்காணப்பட்ட யானைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் சர்வதேச ரீதியாக உலக யானைகள் தினம் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்ட் 21 ஆந் திகதி கொண்டாடப்படுகின்றது. பின்னவளை யானைகள் சரணாலயத்தில் உலக யானைகளட தினம் மற்றும் யானைகள் சரணாலயத்தின் 40 ஆண்டு பூர்த்தியின் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

2015 ஆண்டில் உள்நாட்டு பார்வையாளர்கள் 734,699 பேர் மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் 362,662 பின்னவளை யானைகள் சரணாலயத்தைப் பார்வையிட வந்துள்ளனர். அதற்கமைய மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 1,097,361 ஆகும்.

- **பின்னவளை மிருகக்காட்சிசாலை**

பின்னவளை யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளை கவருதலும், திறந்த மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவை பார்வையாளர் களுக்கு வழங்குதலையும் நோக்கமாகக்கொண்டு பின்னவளை மிருகக்காட்சிசாலை ஆரம்பிக்கப்பட்டது. கூடுகள் அல்லது சிறிய குறுங்காடுகளை விட மிக சுதந்திரமாக வாழ்வதற்கு இயன்ற வகையில் இடவசதி வழங்குவதை நோக்கமாகக் கொண்டும், பார்வையாளர்களுக்கு கூடிய அவதானிப்பு வசதிகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் இந்த மிருகக்காட்சிசாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன் நிர்மாணிப்புப் பணிகளை இலங்கை வலயம் மற்றும் உலக வலயம் (Sri Lankan Zone and World zone) ஆகிய இரு வலயங்களின் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை வலயத்தினுள் இலங்கைக்கே தனித்துவமான சிறுத்தைகளின் பாதுகாப்பு, இனப்பெருக்கம் மற்றும் நடத்தைகள் பற்றி அவதானிக்கப்பட்டு வருகின்றன. இங்கு சிறுத்தைக் குறுங்காடுகள், கலப்பு மான்களின் குறுங்காடுகள் ஆகிய விலங்குகளின் குறுங்காடுகளின் காட்சிகூடம் 2015.04.17 **ஆந்** திகதியில் இருந்து பொது மக்களின் பார்வைக்காக திறந்துவிடப்பட்டுள்ளது. கரடி மற்றும் முதலைகளின் காட்சிகூடங்களின் பணிகள் மேற்கொள்ளப்gட்டுள்ளதுடன், அதன் மூலம் இம் மிருகக்காட்சிசாலை கண்கவர் தோற்றத்துடன் காட்சி தருகின்றது.

**பின்னவளை மிருகக்காட்சிசாலையின் வசமுள்ள மொத்த விலங்கினங்கள்**

| | விலங்குகளின் வகைப்படுத்தல் | விசேட/குடும்பம | விலங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பாலூட்டிகள் | 12 | 113 |
| 2 | பறவைகள் | 14 | 57 |
| 3 | ஊர்வன | 6 | 28 |
| | **மொத்தம்** | **32** | **198** |

2015 ஆண்டின் மே மாதத்தில் இருந்து டிசெம்பர் வரை 333,219 உள்நாட்டுப் பார்வையாளர்கள் மற்றும் 2,213 வெளிநாட்டு பார்வையாளர்கள் பின்னவளை மிருகக்காட்சிசாலையைப் பார்வையிட வருகை தந்துள்ளனர். அதற்கமைய மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை 335,432 பேர் ஆகும்.

- **அம்பாந்தோட்டை சபாரி பூங்கா**

நவீன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவின்படி சபாரி பூங்காவை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், ஆபிரிக்கா சிங்க வலயம், ஆபிரிக்கா தாவர உண்ணி விலங்கின வலயம், வங்காள புலிகளின் குறுங்காடுகளுடன் கூடிய ஆசிய வலயம், சிறுத்தை குறுங்காடுகளுடன் கூடிய இலங்கை வலயம் மற்றும் அவுஸ்த்ரேலியா வலயம் ஆகிய ஐந்து வலயங்களினுள் விலங்குகள் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை வாழ் மக்களுக்கு சபாரிச் சுற்றுலா அனுபவங்களை வழங்குவதோடு, சுற்றாடல் புடைபொருள் மேம்பாட்டுக்கு பங்களிப்பு நல்குதல், மிருகக்காட்சிசாலைகளில் உள்ள தனித்துவமான விலங்கினங்களின் இனப்பெருக்கத்திற்கான நடவடிக்கைகளை எடுத்தல், பொருத்தமான விலங்குண்ணிகளை அவர்களது சாதாரண சுற்றாடலுக்கு மீள விடுவிடுத்தல் மற்றும் தனிமையாக செறிந்து வாழும் விலங்கின மரபணச் சேர்வைகளை விருத்தி செய்தல் என்பன இதன் அடிப்படைக் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

**2015.12.31** திகதியளவில் ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவின் மொத்த விலங்குகள்

| விலங்குகளின் வகைப்படுத்தல் | விசேட/குடும்பம் | விலங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாலூட்டிகள் | 29 | 138 |
| பறவைகள் | 7 | 13 |
| ஊர்வன | 1 | 8 |
| **மொத்தம்** | **37** | **159** |

**விலங்குகளுக்கு உணவுகளை வழங்குகின்ற விவசாயப் பண்ணை**

தெஹிவலை தேசிய மிருகக்காட்சிசாலையில் உள்ள தாவரவுண்ணிகளுக்கு புதிய, ஊட்டச்சத்துக்கள் கொண்ட உணவுகளில் ஒரு பகுதியை வழங்குவதற்காக இப் பண்ணை 1997 ஆண்டில் ஹொரணை கோனபொல பிரதேசத்தில் தாபிக்கப்பட்டது. 2015 ஆண்டில் ரூ 3.073 மில்லியன் பெறுமதியான விலங்குகளுக்கான உணவுப் பொருட்கள் இவ் விவசாயப் பண்ணையில் இருந்து தெஹிவல மிருகக்காட்சிசாலைக்கு வழங்கப்பட்டது.

**2015.12.31** இல் கோனபொல பண்ணையில் தங்கவைக்கபட்டுள்ள மொத்த விலங்குகள்

| விலங்குகளின் வகைப்படுத்தல் | விசேட/குடும்பம் | விலங்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பாலூட்டிகள் | 1 | 1 |
| பறவைகள் | 6 | 150 |
| ஊர்வன | 1 | 1 |
| **மொத்தம்** | **8** | **152** |

## தேசிய மிருகக்காட்சாலைகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2010-2014

| ஆண்டு | தெஹிவலை மிருகக்காட்சிசலை | | | பின்னவல யானைகள் சரணாலயம் | | | முழுமொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் | |
| 2010 | 1,677,775 | 17,197 | 1,694,972 | 400,029 | 229,359 | 629,388 | 2,324,360 |
| 2011 | 1,689,755 | 20,446 | 1,710,201 | 463,982 | 264,452 | 728,434 | 2,438,635 |
| 2012 | 1,412,062 | 21,188 | 1,433,250 | 497,157 | 266,297 | 763,454 | 2,196,704 |
| 2013 | 1,429,322 | 27,120 | 1,456,442 | 437,628 | 278,740 | 716,368 | 2,172,810 |
| 2014 | 1,249,562 | 28,823 | 1,278,385 | 444,483 | 320,019 | 764,502 | 2,042,887 |

## தேசிய மிருகக்காட்சிசாலைகளுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை - 2015.12.31 இல்

| மாதம் | தெஹிவலை மிருகக்காட்சிசலை | | | பின்னவல யானைகள் சரணாலயம் | | | பின்னவல மிருகக்காட்சிசாலை | | | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் | உள்நாடு | வெளிநா | மொத்தம் | உள்நாடு | வெளிநா | மொத்தம் | |
| சனவரி | 55,422 | 2,967 | 58,389 | 17,667 | 33,862 | 51,529 | | | | 109,918 |
| பெப்ரவரி | 76,911 | 1,772 | 78,683 | 34,593 | 43,774 | 78,367 | | | | 157,050 |
| மார்ச் | 93,621 | 2,548 | 96,169 | 57,399 | 32,893 | 90,292 | | | | 186,461 |
| ஏப்ரல் | 84,621 | 1,419 | 86,040 | 81,475 | 25,434 | 106,909 | | | | 192,949 |
| மே | 75,188 | 1,726 | 76,914 | 70,389 | 20,790 | 91,179 | 80,013 | 456 | 80,469 | 248,562 |
| ஜுன் | 78,964 | 2,037 | 81,001 | 66,317 | 17,270 | 83,587 | 41,980 | 283 | 42,263 | 206,851 |
| ஜுலை | 161,088 | 2,565 | 163,653 | 95,199 | 32,896 | 128,095 | 52,398 | 466 | 52,864 | 344,612 |
| ஆகஸ்ட் | 257,088 | 4,301 | 261,389 | 112,421 | 35,409 | 147,830 | 63,007 | 401 | 63,408 | 472,627 |
| செப்தெம்பர் | 147,650 | 2,456 | 150,106 | 67,734 | 27,556 | 95,290 | 29,919 | 181 | 30,100 | 275,496 |
| ஒக்ரோபர் | 112,514 | 1,664 | 114,178 | 45,767 | 28,436 | 74,203 | 21,593 | 97 | 21,690 | 210,071 |
| நவம்பர் | 50,349 | 2,080 | 52,429 | 23,248 | 30,081 | 53,329 | 10,577 | 107 | 10,684 | 116,442 |
| டிசெம்பர் | 124,769 | 4,867 | 129,636 | 62,490 | 34,261 | 96,751 | 33,732 | 222 | 33,954 | 260,341 |
| **மொத்தம்** | **1,318,185** | **30,402** | **1,348,587** | **734,699** | **362,662** | **1,097,361** | **333,219** | **2,213** | **335,432** | **2,781,380** |

## தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் வருமானம் - 2010 இலிருந்து 2015 வரை

| | வருமானம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | தெஹிவளை மிருகக்காட்சிசாலை வருமானம் (ரூ.மி.) | | | | பின்னவளை யானைகள் சரணாலயம் வருமானம் (ரூ.மி.) | | | | பின்னவளை மிருகக்காட்சிசாலை வருமானம் (ரூ.மி.) | | | | திணைக்களத்தின் மொத்த வருமானம் (ரூ.மி.) |
| | உள்நாடு | வெளிநாடு | பிற | மொத்தம் | உள்நாடு | வெளிநாடு | பிற | மொத்தம் | உள்நாடு | வெளி நாடு | பிற | மொத்தம் | |
| 2010 | 128,171,120 | 20,698,750 | 10,889,527 | 159,759,397 | 29,342,130 | 389,398,500 | 9,236,568 | 427,977,198 | | | | | 587,736,595 |
| 2011 | 130,922,050 | 24,717,750 | 8,205,340 | 163,845,140 | 34,053,050 | 445,521,000 | 7,963,125 | 487,537,175 | | | | | 651,382,315 |
| 2012 | 110,039,210 | 25,108,000 | 12,461,397 | 147,608,607 | 36,083,510 | 455,554,750 | 6,045,667 | 497,683,927 | | | | | 645,292,534 |
| 2013 | 112,079,300 | 34,521,500 | 16,149,487 | 162,750,287 | 33,115,310 | 516,401,750 | 7,607,297 | 557,124,357 | | | | | 719,874,644 |
| 2014 | 98,383,110 | 46,895,300 | 19,350,460 | 164,628,870 | 32,601,730 | 698,874,100 | 10,391,357 | 741,867,187 | | | | | 906,496,057 |
| 2015 | 104,052,560 | 48,004,950 | 24,658,777 | 176,716,287 | 54,730,570 | 765,973,750 | 9,711,609 | 830,415,929 | 25,848,250 | 1,735,750 | 151,960 | 27,735,960 | 1,034,868,176 |

## வருமானம் 2015.12.31 ஆந் திகதியளவில்

| மாதம் | தெஹிவளை மிருகக்காட்சிச லை (ரூ.மி.) | பின்னவளை யானைகள் சரணாலயம் (ரூ.மி.) | பின்னவளை மிருகக்காட்சிசா லை (ரூ.மி.) | மொத்தம் (ரூ.மி.) |
|---|---|---|---|---|
| சனவரி | 11.61 | 76.90 | | 88.52 |
| பெப்ரவரி | 10.84 | 103.17 | | 114.01 |
| மார்ச் | 11.18 | 79.38 | | 90.57 |
| ஏப்ரல் | 9.44 | 61.75 | | 71.20 |
| மே | 9.61 | 43.01 | 6.56 | 59.19 |
| ஜூன் | 12.02 | 40.36 | 3.31 | 55.70 |
| ஜூலை | 18.47 | 77.34 | 4.24 | 100.05 |
| ஆகஸ்ட் | 31.17 | 87.63 | 5.30 | 124.10 |
| செப்தெம்பர் | 17.60 | 65.54 | 2.57 | 85.71 |
| ஒக்ரோபர் | 14.41 | 60.95 | 1.82 | 77.20 |
| நவம்பர் | 8.60 | 62.59 | 0.99 | 72.19 |
| டிசெம்பர் | 21.73 | 71.76 | 2.91 | 96.40 |
| **மொத்தம்** | **176.72** | **830.42** | **27.73** | **1034.87** |

# பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்கள்

## தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் பிரதான அபிவிருத்தி பணிகள்



**வெளிநாட்டுப் பறவைகள் பூங்கா**



**குரங்குக் கூடு**

நவீன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவுக்கு அமைய விலங்குகளுக்கு போதிய இடவசதிகளுடன் கூடிய விலங்கு ஆரணியங்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு நவீன வசதிகளை வழங்குமுகமாக 2011 ஆண்டில் இருந்து தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் நவீனமயப்படுத்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வங்காள புலி ஆரணியம் மற்றும் நாய்களின் குடும்பம் தொடர்பாக ஆரணியம், ஊர்வனவற்றிற்கான பூங்கா நவீனமயப்படுத்தல், வெளிநாட்டுப் பறவைகள் பூங்கா நவீனமயமாக்கல், குப்பை எரியூட்டலில் பழுதுபார்த்தல் ஆகிய பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 2015 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## 2015 ஆண்டின் நிதி மேம்பாடு

**ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான இணைந்த நிதியம் - ரூ.மி. 120.0**

- **நிதிசார் மேம்பாடு - ரூ.மி. 102.0**

**ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியம் - ரூ.மி. 100.0**

- **நிதிசார் மேம்பாடு - ரூ.மி. 18.27**

**ஒட்டுமொத்த நிதிசார் மேம்பாடு - ரூ.மி. 120.27**

**திரண்ட செலவு - ரூ.மி. 480.64**

- **இணைந்த நிதியம் - ரூ.மி. 337.40**
- **மிருகக்காட்சிசாலை அபி.நிதியம் - ரூ.மி. 143.24**

| உப செயற்திட்டங்கள் | | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மி) | திரண்ட உள்ளபடி செலவு 2015.12.31இல் (ரூ.மி) | பௌதீக மேம்பாடு 2015.12.31 இல் |
|---|---|---|---|---|
| i | வங்காள புலி ஆரணியம் மற்றும் நாய்களின் குடும்பம் ஆகியன தொடர்பாக ஆரணியம் | 56.8 | 42.5 | 80% - சிறு விலங்கின குகை ஒன்றினதும் மலக்குழாய் முறையின் வேலை முடிவடைந்துள்ளன குளம் மற்றும் வேலியிடல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |
| ii | ஊர்வன — பூங்கா நவீனமயப்படுத்தல் | - | | 40%- கூரையின் திருத்த வேலைகள் முடிவுறுத்தப் பட்டுள்ளன. |
| iii | வெளிநாட்டு பறவைகள் — பூங்கா நவீனமயப்படுத்தல் | 23.5 | 13.4 | 50% - கூட்டின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. பார்வையாளர் பகுதியின் கம்பங்கள் அமைக்கப்பட்டு முடிந்துள்ளன. |
| iv | குப்பை எரியூட்டல் பழுதுபார்த்தல் | 13.7 | 9.5 | 65% - எரியூட்டியின் செயற்பாடற்ற பகுதிகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன சிமினி உடைத் தெறியப்பட்டது.. |
| vi | சுதந்திர யானைகள் ஆரணியப் பகுதி நிர்மாணம் (எஞ்சிய பகுதி) | - | | புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது |
| vii | உள்ளக வீதி இல. 06, நவீனமயப்படுத்தல் | 30.6 | 26.2 | 100% - நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| viii | உள்ளக வீதி இல. 07, நவீனமயப்படுத்தல் | - | | திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.. |
| ix | தாராக்களுக்கான ஆரணியம்,சேவைப் பாதை, அலுவலர் வாகன தரிப்பிடம் மற்றும் மலகலகூட முறைமை | 14.1 | 5.7 | 75% - வாகன தரிப்பிட நிர்மாணம் முடிவடைந்துள்ளன. மவல்லகூட கூரை வரை நிர்மாணிப்பு சேவைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| x | குரங்குக் கூடு | 10.7 | 2.2 | 25% - கம்பம் போடும் பணி முடிவடைந்துள்ளன. |

- **பின்னவலை யானைகள் சரணாலயத்தின் பிரதான அபிவிருத்திப் பணிகள்**

மேற்படி சரணாயலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பல உள்ளக வீதிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மறுசீரமைத்தல், நலன்புரி சிற்றுண்டிச்சாலையை சுற்றிவர உள்ள பகுதியை நவீனமயப்படுத்தல் மற்றும் நாரம்பட பிரதேசத்தின் சுகயீனமுற்ற யானைகள், கொம்பன் யானைகளுக்கு ஆரணியம் நிர்மாணித்தல் ஆகிய அபிவிருத்தி வேலைகள் 2015 அண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. அலுவலகத்துக்குக் கிட்டிய எல்லை மதில் அமைத்தல் ஆகிய அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன..





உள்ளக வீதி முறைமை

வாவி மறுசீரமைத்தல்

**2015 ஆண்டின் நிதி மேம்பாடு**

| | | | |
|---|---|---|---|
| **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான இணைந்த நிதியம்** | - | **ரூ.மி.** | **32.0** |
| • **நிதிசார் மேம்பாடு** | - | **ரூ.மி.** | **31.75** |
| **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியம்** | - | **ரூ.மி.** | **35.0** |
| • **நிதிசார் மேம்பாடு** | - | **ரூ.மி.** | **4.34** |
| **ஒட்டுமொத்த நிதிசார் மேம்பாடு** | - | **ரூ.மி.** | **36.09** |

- **பின்னவலை புதிய மிருகக்காட்சிசாலையின் நிர்மாணப் பணிகள்**

பின்னவலை மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் முன்னேற்ற மதிப்பீடானது, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பார்வையாளர்களுக்கு வசதிகளை அமைத்தல், விலங்கின ஆரணிய நிர்மாணிப்பு மற்றும் காணிகொள்ளல் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆண்டின் இறுதியில் கரடி ஆரணியம் மற்றும் முதலை காட்சிகூட அலகின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், புதிதாக சுவீகரிக்கப்பட்ட காணியைச் சுற்றி எல்லை வேலி அமைக்கப்பட்டது. பார்வையாளர்கள் தொடர்பாக தொடர்ந்தும் வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும், புதிய விலங்கு ஆரணியங்களை நிர்மாணிப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.





**நிதி மேம்பாடு**

ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான இணைந்த நிதியம் - ரூ.மி. **91.00**

- நிதிசார் மேம்பாடு - ரூ.மி. **81.90**

ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான
மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியம் - ரூ.மி. **140.0**

- நிதிசார் மேம்பாடு - ரூ.மி. **47.55**

ஒட்டுமொத்த நிதிசார் மேம்பாடு - ரூ.மி. **129.45**

திரண்ட செலவு - ரூ.மி. **985.58**

- இணைந்த நிதியம் - ரூ.மி. **564.06**
- மிருகக்காட்சிசாலை அபி.நிதியம் - ரூ.மி. **421.52**

| உப செயற்திட்டங்கள் | | ஒதுக்கீட்டு தொகை (ரூ.மி) | திரண்ட உள்ளபடி செலவு 2015.12.31இல் (ரூ.மி) | பௌதீக மேம்பாடு (%) 2015.12.31 இல் |
|---|---|---|---|---|
| i | கரடி ஆரணியம் | 47.9 | 21.044 | 70% - கரடி குகைகளில் 75% உலர் ஓடை நிர்மாணிப்பு வேலைகள் முடிவுறுத்தப் பட்டுள்ளன. ஓடை மதிலின் 96% மற்றும் கரடி பார்வையாளர் அரங்கின் 65% சுவர்கள் கட்டிமுடிக்கப் பட்டுள்ளன. |
| ii | முதலை காட்சிப்படுத்தல் அலகு | 76.5 | 43.493 | பிரதான வேலைகள் முடிந்துள்ளன. 80% குளங்கள், 01 நுழைவு, 95 மேடைகளின் 01 95%,மேடையின் 45% - 0290, 90% மத்திய நுழைவு.. |

- **அம்பாந்தோட்டை சபாரி பூங்காவின் நிர்மாணிப்பு வேலைகள்**

ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா 2015 ஆம் ஆண்டில் சிங்க வலயம், ஆபிரிக்கா தாவர உண்ணி விலங்கு வலயம், ஆசியா வலயம், செயற்பாட்டுப் பிரதேசம், வதிவிட பிரதேசம் ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பார்வையாளர்களுக்கான வசதிகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

♏நிதி மேம்பாடு

| | | |
|---|---|---|
| **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான இணைந்த நிதியம்** | **-** | **ரூ.மி. 332.0** |
| • **நிதிசார் மேம்பாடு** | **-** | **ரூ.மி. 331.9** |
| **ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கான மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியம்** | **-** | **ரூ.மி. 220.0** |
| • **நிதிசார் மேம்பாடு** | **-** | **ரூ.மி. 154.6** |
| **ஒட்டுமொத்த நிதிசார் மேம்பாடு** | **-** | **ரூ.மி. 486.5** |

| | | |
|---|---|---|
| **திரண்ட செலவு** | **-** | **ரூ.மி. 1,637.86** |
| • **இணைந்த நிதியம்** | **-** | **ரூ.மி. 846.59** |
| • **மிருகக்காட்சிசாலை அபி.நிதியம்** | **-** | **ரூ.மி. 791.27** |

| உப செயற்திட்டங்கள் | | ஒதுக்கீட்டு தொகை (ரூ.மி) | திரண்ட உள்ளபடி செலவு 2015.12.31இல் (ரூ.மி) | பௌதீக மேம்பாடு (%) 2015.12.31 இல் |
|---|---|---|---|---|
| i | நில அலங்காரம் எஞ்சிய பகுதி – ஆபிரிக்க வலயம் | 49.086 | 39.46 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| ii | நில அலங்காரம் - ஆபிரிக்க வலயம் | 21.832 | 6.53 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| iii | குளம் நிர்மாணிப்பு– ஆபிரிக்க வலயம் | 10.686 | 9.54 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| iv | நில அலங்காரம் ஆபிரிக்க வலயம் | 31.141 | 23.147 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| v | குளம் நிர்மாணிப்பு– ஆசியா வலயம் | | | நீர்ப்பாசன திணை. மதிப்பீட்டு பெறுகை உள்ளது. |
| vi | வங்காள புலி வலயம் | | | புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| vii | மின்வலு விநியோக பிரதான முறைமை | 46.677 | 39.92 | 96% - நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.. விரைவில் வேலை முடிவுறுத்தப்படும். |
| viii | செயற்பாட்டுப் பிரதேச வீதி வலையமைப்பு | 34.694 | 23.399 | 98% - நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.. விரைவில் வேலை முடிவுறுத்தப்படும். |

| உப செயற்திட்டங்கள் | | ஒதுக்கீட்டு தொகை (ரூ.மி) | திரண்ட உள்ளபடி செலவு 2015.12.31இல் (ரூ.மி) | பௌதீக மேம்பாடு (%) 2015.12.31 இல் |
|---|---|---|---|---|
| ix | நில அலங்காரம்-நுழைவுப் பகுதி | 174.903 | 119.88 | .97% நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் வேலை முடிவுறுத்தப்படும் |
| x | கராஜ் | 17.85 | 8.927 | 15% - நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| xi | செயற்பாட்டுப் பிரதேச அபிவிருத்தி செயற்திட்டங்கள் | 94.544 | 93.248 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| xii | சிங்க குகை–விலங்கு பொறுப் பாளர்களுக்கான கொட்டகை | 8.93 | 1.8 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| xiii | சிங்க வலயத்தின் உட்புற மதில்–எஞ்சிய பகுதி | 49.927 | 44.59 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| xiv | நில அலங்காரம் - சிங்க வலயம் | 12.471 | 9.15 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |
| xv | சிங்க வலயத்தின் சபாரி வீதி அபிவிருத்தி | 15.778 | 5.66 | 100% - நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. |

## விலங்குப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் 2015.12.31 திகதியளவில்

மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்துக்கு விலங்குகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரதான வழியாக அமைவது விலங்குகளைப் பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதேயாகும்.

**(அ) ஏற்றுமதி செய்யப்பட்ட விலங்குகள்**

